## அதிகாரம் 22

# ஆபிரகாமின் விசுவாசம் சோதிக்கப்படுதல்

22ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முக்கியமான இந்நிகழ்வு பழைய ஏற்பாட்டின் நன்கு அறியப்பட்ட பகுதியாகும். எப்படியாயினும் இது வாசிப்போரின் புரிதலுக்கு மிகவும் கடினமான பகுதியாகவுமிருக்கிறது. நெடுநாள் காத்திருந்த வாக்குப்பண்ணப் பட்ட மகனாகிய ஈசாக்கை ஆபிரகாம் இறுதியாக பெற்றுக் கொண்டார். ஒரு விசுவாச சோதனையில், அம்மைந்தனை ஆண்டவரிடம் திருப்பிக் கொடுக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். எனினும் ஆபிரகாம் சோதனையில் வெற்றி கண்டார், அம்மைந்தனின் உயிரை எடுத்துவிடாதபடி ஆண்டவர் தடுத்தாட்கொண்டார் (22:1-14). இந்த அதிகாரம் ஆபிரகாம் கணக்கிலடங்கா வழிமரபினரால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார் எனும் வாக்குத்தத்தத்தை புதிப்பித்தலோடும் (22:15-19), அவருடைய சகோதரராகிய நாகோரின் வழிமரபோடும் (22:20-24) நிறை வுறுகிறது.

## ஆபிரகாமின் உத்தமம் (22:1-14)

### ஈசாக்கை பலி செலுத்த அழைப்பு (22:1-8)

**[1]இந்தக் காரியங்கள் நடந்த பின்பு, தேவன் ஆபிரகாமைச்
சோதித்தார்; எப்படியெனில், அவர் அவனை நோக்கி: ஆபிரகாமே
என்றார்; அவன்: இதோ அடியேன் என்றான். [2]அப்பொழுது அவர்: உன்
புத்திரனும், உன் ஏகசுதனும், உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ
இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய்,
அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத்
தகனபலியாகப் பலியிடு என்றார். [3]ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து,
தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில்
இரண்டுபேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு,
தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்து கொண்டு, தேவன் தனக்குக்
குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப்போனான். [4]மூன்றாம் நாளில்
ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, தூரத்திலே அந்த**

**இடத்தைக் கண்டான். [5]அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரை நோக்கி: நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள், நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய், தொழுதுகொண்டு, உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம் என்றான். [6]ஆபிரகாம் தகனபலிக்குக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின் மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டான்; இருவரும் கூடிப்போனார்கள். [7]அப்பொழுது ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி: என் தகப்பனே என்றான்; அதற்கு அவன்: என் மகனே, இதோ, இருக்கிறேன் என்றான்; அப்பொழுது அவன்: இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான். [8]அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான்; அப்புறம் இருவரும் கூடிப்போய்.**

ஆபிரகாமிற்கு கட்டளையிடுகிற நரபலி எனும் ஆண்டவருடைய எண்ணம் தற்கால வாசகர்களுக்கு விரும்பத் தகாதது போன்று தோன்றும். தனது சட்டப் பூர்வ வாரிசிற்கு வெகு நாள் காத்திருந்த இந்த விசுவாச மனிதருக்கு இப்படிப்பட்ட ஒரு கடினமான பணியை கொடுப்பது மிகவும் கொடூரமானதாகும். வயது முதிர்ந்த இருவருடைய வாழ்வில் இடைமறித்து, கருக்கொள்ள செய்து, ஈசாக்கை பிறக்கச் செய்ததின் மூலம் நம்பிக்கை தந்த ஒரு நல்ல ஆண்டவர் வாக்குப்பண்ணப்பட்ட பிள்ளையை எப்படி கொல்லக் கேட்கக்கூடும்?

அதே சமயம் தயங்காமல் அல்லது கேள்வியெழுப்பாமல் அவ்வளவு எளிதில் ஆபிரகாம் எவ்வாறு ஆண்டவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்திருக்கக் கூடும்? அவர் ஈசாக்கை மிகவும் நேசித்தபடியால் லோத் மற்றும் சோதோம் கொமோரா பட்டணத்திலிருந்த மற்றவர்களுக்காக மன்றாடினது போன்று ஏன் ஈசாக்கின் உயிருக்காக மன்றாடவில்லை? இவைகள் மிகவும் கடினமான வினாக்களாகும். மேலும் வேத வசனங்கள் இவை களுக்கு விடையை கொடுப்பது இல்லை. எப்படியாயினும் ஆண்டவர் இதைப் போன்ற தனி நபர்களை அல்லது இஸ்ரவேல் மக்களை சோதிப்பதாக சித்திரிக்கும் வேத பகுதிகளுக்கு தீர்வு கண்டு தவறான சில கருத்துக்களுக்கு தெளிவுபடுத்த எழுதப்பட்ட தொகுப்புகள் சிறு குறிப்பினைக் கூட அளிப்பது இல்லை. மேலும் ஆண்டவர் மற்றும் ஆபிரகாம் ஆகிய இருவரைக் குறித்து கூறப்படும் தவறான எண்ணங்களுக்கு விடை கொடுக்க புதிய ஏற்பாடு சில உதவிகளைத் தருகிறது.

**வசனம் 1.** இந்த அதிகாரத்தின் தொடக்கம் **இந்த காரியங்கள் நடந்தப் பின்பு** எனும் அறிமுகத்தைக் கொண்டுள்ளது. முந்தைய அதிகாரத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கு பிறகு எவ்வளவு காலம் சென்றது என்பதனைக் குறித்து நமக்கு தகவல் கூறப்படவில்லை; ஈசாக்கின் பிறப்பிற்கும், அபிமெலேக்கை சந்தித்ததற்கும் இடையில்

நெடுங்காலம் கழிந்தது. ஈசாக்கு இச்சமயம் குறைந்தது பதின் இளைஞனாக இருந்திருக்க வேண்டும். சில காலம் **ஆபிரகாமோடு** ஆண்டவர் பேசவில்லையென்றாலும், ஆண்டவருக்கான அவருடைய உடனடி மறுமொழி: **இதோ அடியேன்** என்பதாக இருந்தது.

கர்த்தர் **ஆபிரகாமை சோதித்தார்** என்று ஆண்டவருடைய கட்டளையின் காரணத்தை இத்தொகுப்பு எடுத்துரைக்கிறது. ஆங்கில KJV மொழிபெயர்ப்பானது சோதித்தார் என்பதற்கு נָסָה (*nasah,* நாசா), எனும் எபிரெய பதத்தினை வேறெங்கும் பயன்படுத்தாமல் இங்கு மட்டுமே பயன்படுத்துகிறார். ஒரு மனிதனை பாவம் செய்யும்படி ஆண்டவர் சோதிப்பதில்லை என வேதம் தெளிவாக கூறியிருந்தாலும் (யாக். 1:13) இப்பதத்தின் முதல் பயன்பாடு ஆண்டவர் ஆபிரகாமை பாவம் செய்ய சிக்க வைத்தார் எனும் உணர்வை தருகிறது. ஆபிரகாம் சோதிப்பினை குறிக்க பயன்படுத்தப்படும் வேர் சொல்லே ஆண்டவருடைய பிள்ளைகளை சோதிப்பதற்கும் நிரூபிப்பதற்கும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது (யாத். 15:25; 16:4; 20:20; உபா. 8:16; 13:3; நியா. 2:22; 3:1, 4 ஆகியவற்றைக் காண்க).

இப்படி சோதிப்பதற்கு ஏற்ற காரணம் அரசராகிய எசேக்கியாவின் தொகுப்பில் கூறப்பட்டுள்ளது: “அவன் இருதயத்தில் உண்டான எல்லாவற்றையும் அறியும்படி அவனைச் சோதிக்கிறதற்காக தேவன் அவனைக் கைவிட்டார்” (2 நாளா. 32:31; காண்க உபா. 8:2; சங். 26:2). சோதிப்பதனால் அவரது மக்களுடைய உண்மையான எண்ணத்தையும் உள் நோக்கத்தையும் ஆண்டவர் வெளிக்கொணர்ந்தார். அந்த செயல் முறை வழியாய்,[1] அவர் விரும்பும் பண்புகளையும், தகுதிகளையும், விசேஷமாக ஆழமான விசுவாசத்தையும் மேம்படுத்தக்கூடுமென நம்பினார். ஆபிரகாமினுடைய நிகழ்வில் ஆண்டுகள் கழிந்த நிலையில் அவருடைய பண்பும் விசுவாசமும் இந்த இறுதி சோதனையில் நிலைத்திருக்குமா? தனது மனித காரணங்களுக்காக ஈசாக்கை ஆழமாக நேசிக்கவும், அவருடைய மகனின் எதிர்கால கனவுகளை நிறைவேற்ற ஆண்டவருடைய சித்தத்திற்கு மேலாக தன் சொந்த சித்தத்தை வைத்து விட்டாரா? ஈசாக்கை நரபலியிடுவதனால் ஆண்டவர் மீது போதுமான அளவு நம்பிக்கைக் கொண்டாரா? என ஆண்டவர் பார்க்க விரும்பினார் (எபி. 11:17-19)?

**வசனம் 2.** ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட தெய்வீக கட்டளை பகுத்தறிவின் புரிதலுக்கு எதிராக உள்ளது. இது ஈசாக்கை குறித்த மூன்று குறிப்புகளுடன் கட்டாயத்தை உள்ளடக்கி ஆரம்பித்து **உன் புத்திரனும், உன் ஏகசுதனும், உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை** என பொதுவான குறிப்பிலிருந்து குறிப்பிட்ட காரியத்திற்கு மாறுகிறது.

ஏக சுதனென மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள יָחִיד (*yachid*, யசிட்) எனும் எபிரெயபதம் “தனித்துவம் வாய்ந்த மற்றும் விலைமதிப்பற்ற”[2] என்கின்ற எழுத்துப் பூர்வ பொருளை தருகிறது. யசிட் ஆனது (μονογενής,

*monogenēs*, மொநொஜின்ஸ்) எபிரெயர் 11:17ல் ஈசாக்கை குறிப்பிட பயன்படுத்தப்பட்டுள்ள மொனொகஸ் என்கிற கிரேக்கப் பதத்திற்கு சமமாக இருக்கிறது. அந்த வசனத்திலுள்ள இந்த வார்த்தையை NASB ஆங்கில மொழிபெயர்ப்பு வேதம் "ஒரே பேறான குமாரன்" என மொழி பெயர்க்கிறது. எப்படியாயினும் ஜெரோம் லத்தீன் வல் கேட்டிலிருந்து தொடங்கி (கி.பி. 395) தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டு, பிற்பாடு KJV (கி.பி. 1611) மொழி பெயர்ப்பாளர்களால் ஏற்கப்பட்டிருக்கிற இந்த மொழியாக்கம் சரியான ஒன்றல்ல. ஈசாக்கை "ஒரே பேறான குமாரன்" என்று எழுத்துப் பூர்வமாக குறிப்பிடுவது தவறான கணிப்பாகும், ஏனெனில் ஆபிரகாம் இஸ்மவேல் மற்றும் ஈசாக்கு எனும் இரண்டு மகன்களை உடையவராக இருந்தார். மாறாக இனப் பெருக்கத்தை கடந்து வயது சென்றவர்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டு பிறந்தப்படியால் "தனித்துவம் வாய்ந்த ஒரே மகனாக" இருக்கிறார். அவருடைய பிறப்பு அற்புதமானது.

ஆண்டவர் தமது கட்டளையை தொடருகையில், **மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு** என உத்தரவிட்டார். "மோரியா தேசம்" என குறிப்பிடப்பட்டுள்ள சரியான சொற்றொடர் வேதத்தில் வேறெங்கும் காணப்படவில்லை. பழைய ஏற்பாட்டில் மோரியாவைக் குறித்து கூறப்பட்டுள்ள மற்ற ஒரே குறிப்பு "பின்பு சாலொமோன் எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையில் எபூசியனாகிய ஒர்னானின் களம் என்னும் தாவீது குறித்து வைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத்துவக்கினான்" என குறிப்பிடும் 2 நாளாகமம் 3:1ல் உள்ளது. பிற்காலத்தில் "மோரியா" எனும் பெயர் குறிப்பிட்ட ஒரு பொதுவான பகுதிக்கு வழங்கப்படாமல் ஒரு மலைக்கு உரியதாய் "ஆண்டவருடைய மலை" என வழங்கப்பட்டது (22:14) இஸ்ரவேலர்கள் ஈசாக்கினை பலியிடுதல் நிகழ்ந்தாக அவர்கள் விசுவாசிக்கும் எருசலேமின் ஒரு பகுதிக்கு "மோரிய மலையென" பெயரிட்டனர். இந்த இடத்தில் தான் தாவீது ஆண்டவருக்கு பலியிட்டார் (2 சாமு. 24:16-25; 1 நாளா. 21:16-26), சாலொமோனும் அங்கு தான் ஆலயத்தைக் கட்டினார்.[4]

ஆண்டவருடைய கட்டளையில் ஆபிரகாமிற்கு காணப்படும் கடினமான செயல் என்னவெனில் ஈசாக்கை "தகன பலியாக" (עֹלָה, *'olah*, ஓலா) அளிக்க வேண்டுமெனும் தெய்வீக உத்தரவில் கூறப்பட்டிருப்பதாகும். பிற்காலத்தில் இஸ்ரவேலர்களின் சட்டமானது *ஓலா* எனப்படும் பலி மட்டுமே பலிபீடத்தின்[5] மீது எரிக்கப்பட முற்றிலும் வேண்டியதாக இருக்கிறதென கூறுகிறது (விலங்கின் தோல்தவிர மற்றதை) இது ஆண்டவரை பிரியப் படுத்தும் சுகந்த வாசனையை உண்டுபண்ணியது (8:21; லேவி. 1:9) ஏனெனில் இது ஆண்டவருக்கு

முற்றிலும் அர்ப்பணித்தலை குறிப்பிடுகிறது. நரபலிகள் ஆண்டவருக்கு வெறுப்புண்டாக்குகிறவைகள் எனும் உண்மையே இங்கு பிரச்சனையை எழுப்புகிறது. பிற்பாடு புற இன மக்கள் அவர்களுடைய கடவுளர்களுக்கு தொழுகை செய்யும் வழிமுறையைப் போன்று அவருடைய மக்கள் ஆண்டவருக்கு தங்கள் பிள்ளைகளை நெருப்பில் எரிப்பதை அவர் தடைச் செய்தார் (லேவி. 18:21; 20:1-5; உபா. 12:31; 18:10).

ஆண்டவர் நரபலிகளை வெறுக்கிறார் என்பதனை குறித்து ஆபிரகாம் எவ்வளவு அறிந்திருந்தார்? என்பதனைக் குறித்து வேத வசனங்களால் நமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை. எப்படியாயினும் வாக்குப்பண்ணப்பட்ட மகனாகிய ஈசாக்கை பலியிட்டு நெருப்பிற்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமெனும் ஆண்டவருடைய கட்டளை அவருடைய வாழ்வின் எல்லைக் கோடி வரை அவரை அசைத்திருக்க வேண்டும். இது மூதாதையர் ஆபிரகாமின் விசுவாசத்திற்கு உச்சக்கட்ட சோதனையாக அமைந்து போனது.

இங்கு வினாயெழுப்புதலானது ஆண்டவரின் பண்பு மற்றும் இயல்புகளைக் குறித்து உள்ளடக்கியுள்ளது. வெளிப்படையாக காணக்கூடிய எவ்விதமான உள்நோக்கமும் இல்லாமல் ஆண்டவர் இத்தனையாண்டு காலமாக நல்லவராக கிருபை நிறைந்தவராக இருந்தாரென்பதனை ஆபிரகாம் நன்கு அறிந்திருந்தார். ஆகவே இது போன்ற கட்டளைக்கான காரணத்தை அவர் புரிந்துகொள்ளாவிட்டாலும் எப்படியாயினும் நன்மைக்காகவே ஆண்டவர் இதனை செய்வார் என கண்டிப்பாக விசுவாசித்திருக்கக் கூடும். இந்த நிகழ்வை சற்று திரும்பி பார்த்து எபிரெய மடலின் ஆக்கியோன் ஆபிரகாம் விசுவாசத்தில் செயல்பட்டு ஆண்டவர் தன் மகனைக் கொன்றாலும் மரித்தோரிலிருந்து மீண்டும் உயிர்த்தெழ வைப்பார் என கூறியிருக்கிறார் (எபி. 11:19).

**வசனம் 3.** அந்த இரவில் **ஆபிரகாம்** எவ்விதமான மன போராட்டங்களை அனுபவித்திருந்தாலும். அவர் அவைகளை தீர்த்துவிட்டார். அவர் **அதிகாலமே எழுந்து** கொண்டாரென வசனம் கூறுகிறது. தெய்வீக கட்டளைக்கு மூதாதையர் ஆபிரகாம் உடனடியாக எதிர் செயல் செய்தார் என்பதனை இந்த வெளிப்பாடு எடுத்துக்காட்டுகிறது (காண்க 19:27; 20:8; 21:14). அவர் ஆண்டவருடைய கட்டளைக்கு கீழ்ப்படியத் தயங்கவில்லை. அதற்கு மாறான இரண்டு இளைஞர்கள் (வேலைக்காரர்கள்), ஒரு கழுதை, தகன பலிக்கு தேவையான விறகுகள், அவருடைய மகன் ஈசாக்கு ஆகியோரை உள்ளடக்கியோருக்கு மூன்று நாள் பயணத்திற்கான முன் ஏற்பாடுகளை அவர் செய்து கொண்டார் (22:4).

**வசனம் 4.** பெயெர்செபாவிலிருந்து பாரம்பரியமிக்க பகுதியான மோரியா மலைக்கு (எருசலேம்) ஏறத்தாழ ஐம்பது மைல்களாகும், மேலும்; ஆண்டவர் செய்ய கூறினதான ஈசாக்கை தகனப் பலியிடுதலை

சிந்தித்தவாரே அங்கு பயணிக்கையில் ஆபிரகாமின் இருதயம் கனத்திருக்கக்கூடும். **மூன்றாம் நாளில்** அந்த இடத்தை மூதாதையர் ஆபிரகாம் **தூரத்திலிருந்து கண்டார்**.

**வசனம் 5.** எப்படியாயினும், அவர்களுடைய நீண்ட பயணத்தின் உண்மையான நோக்கத்தை ஈசாக்கிற்கோ அல்லது வேலைக் காரர்களுக்கோ அவர் வெளிப்படுத்தவில்லை. அதற்கு பதிலாக **கழுதையோடு அங்கேயே நிற்கும்படி** கட்டளையிட்டு, அவரும் ஈசாக்கும் ஆண்டவர் கட்டளையிட்ட இடத்திற்கு தங்கள் பயணத்தை தொடருகையில் நாங்கள் ஆண்டவரைத் **தொழுது கொண்ட** பின்னர் **திரும்பி வருவோம்** என கூறினார். இப்படிக் கூறின இந்த சொற்றொடர் ஆண்டவர் மீதான அவருடைய இறுதியான விசுவாசத்தைக் காட்டுகிறார். எப்படி என்பதனை அவர் சரியாக அறிந்திருக்காவிட்டாலும், எப்படியோ அவர்கள் இரண்டு பேரும் திரும்புவதற்கு நோக்கம் கொண்டிருந்தார்.

**வசனம் 6.** பயணத்தின் அடுத்த பகுதியானது அவர்கள் வேலைக்காரர்களை கழுதையின் பின் விட்டு வந்தபடியினால் இந்த வயது சென்ற மூதாதையருக்கும் அவருடைய மகனுக்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் மிகவும் கடினமானதாக இருந்திருக்கக் கூடும். **ஆபிரகாம் தகனபலிக்குக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின்மேல் வைத்தாரென** பதிவுகள் கூறுகின்றது. ஈசாக்கு பதின் இளைஞனாக இருப்பினும் ஒரு பெரும் தகனபலிக்கான கட்டைகளை மலை வரை சுமப்பதென்பது ஐயத்திற்கு இடமில்லாமல் உடல் கடினமாக இருந்திருக்கும். ஈசாக்கு தனது பின்பக்கத்தில் கட்டைகளை சுமந்து கொண்டு தனது சொந்த சிலுவையை சுமக்க பலவந்தப்படுத்தப்பட்ட ஒரு தண்டனை தீர்க்கப்பட்ட குற்றவாளியைப் போன்று காணப்பட்டாரென ஒரு யூத ரபீ ஒருவர் கூறுகிறார்.[6] ஈசாக்கோடு ஆபிரகாம் நடந்து போகும் போது அவருடைய கலக்கத்தை நாம் கற்பனை மட்டுமே செய்ய இயலும். ஆண்டவர் கூறின கட்டளையை செய்து முடிக்க தேவையான **நெருப்பையும்**[7] **கத்தியையும்** அவர் தனது **கைகளில்** வைத்துக் கொண்டார். அவரது பயணத்தின் உண்மையான நோக்கத்தை அறிவிப்பது வெகு தொலைவில் இல்லை என்பதனை அறிந்திருந்தார்.

**வசனம் 7.** தந்தையும் மகனுமாக மலை மீது ஏறுகையில் **ஆபிரகாமிடம் ஈசாக்கு** பேசின போது அங்கு நிலவிய பேரமைதியை கண்டிப்பாக உடைத்திருக்க வேண்டும். ஒரு விலங்கை கொன்று அதனை பலிபீடத்தின் எரிப்பதற்கான அனைத்தும் தங்களிடம் இருப்பதனை அவர் அங்கீகரித்தார்; ஆனால் **தகனபலிக்கு ஆடு எங்கே?** என தகப்பனிடம் அவர் கேட்டது அந்த சிறுவன் தன் தந்தையை முழுவதுமாக நம்பியிருக்கிறார் என்பதனை இது காட்டுகிறது, ஆனால் பலியிடப்படுவதற்கு விலங்கு இல்லாதபடியால் அவர் வியப்புற்றார்.

இப்படி துணிகரமாக இருப்பதற்கு ஆபிரகாம் தனது மகனை கடிந்து கொள்ளவில்லை; மாறாக, இவ்வுரையாடல் இவ்விருவருக்கும் இடையேயுள்ள ஆழ்ந்த அன்பையும் மதிப்பையும் சித்தரிக்கிறது. ஈசாக்கு அவரை பட்சமாக **என் தகப்பனே** என அழைத்தார்; ஆபிரகாமும் அவரை **என் மகனே** என அன்போடு பதிலளித்தார்.

**வசனம் 8.** ஈசாக்கின் அவ்வினாவிற்கு முற்பிதாவாகிய ஆபிரகாம் வருத்தமுற்றதாகவோ அல்லது கடினமாக விடையளித்ததாகவோ எக்குறிப்பும் நாம் காண இயலவில்லை. அவர் அதைப் போன்றதொரு வினாவை எதிர்பார்த்தார், அவருடைய மறுமொழியானது **என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்** என்பதாக இருந்தது. வேறு வார்த்தையில் கூறுவதெனில், பொதுவாக ஆராதிப்பவர்கள் பலியிடுவதற்கு ஆட்டினை கொண்டு செல்வதற்கு மாறாக தேவன் பலியிடுவதற்கு ஆட்டுக்குட்டியை அளிப்பார் என உறுதியாக கூறினார்.

## ஈசாக்கை பலியிடுதல் (22:9-14)

**9தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த இடத்துக்கு வந்தார்கள்;
அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி,
தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய
கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தினான். 10பின்பு ஆபிரகாம் தன்
குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான்.
11அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து,
ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார்; அவன்: இதோ, அடியேன்
என்றான். 12அப்பொழுது அவர்: பிள்ளையாண்டான்மேல் உன்
கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன்
புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக
ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று
இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார். 13ஆபிரகாம் தன் கண்களை
ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, பின்னாகப் புதரிலே தன்
கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான்;
அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப் பிடித்து, அதைத் தன்
குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான். 14ஆபிரகாம் அந்த
இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்; அதினாலே
கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும் என்று
இந்நாள்வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது.**

**வசனம். 9. தேவன்** குறித்த அந்த **இடத்திற்கு** அவர்கள் வந்த போது, **அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கினார்.** மலை மேல் வரை கட்டைகளை ஈசாக்கு சுமந்து வந்தபடியினால் (22:6), நூறு வயதைக் கடந்த முதியவரான தனது தந்தை

பலிபீடத்தைக் கட்ட கற்களை எடுத்து அமைக்கும்போது நிச்சயமாக ஈசாக்கு உதவியிருக்கக்கூடும். இந்த தொகுப்பு மற்றும் பாடத்திட்டத்தின் வலியுறுத்தமானது ஆபிரகாமின் கீழ்ப்படிதல் அடங்கிய விசுவாசமாக இருப்பினும்; எப்படியாயினும் ஒத்துழைப்பு தருவதற்கு ஈசாக்கும் விசுவாசத்தைக் கொண்டிருந்தார், ஏனெனில் கயிறுகளின் அவசியத்தைப் பற்றி கேள்வியெழுப்பவில்லை. மேலும் அவருடைய தந்தை கயிறுகளால் **கட்டி பலிபீடத்தின் கட்டைகளின் மேல் கிடத்துகையில்** அவர் அதனை எதிர்க்கவில்லை என காணப்படுகிறது. அவர் கட்டைகளை சுமக்குமளவிற்கு போதுமான உறுதியுடையவராக இருந்தபடியால், அவர் அப்படி செய்ய விரும்பியிருக்கும் பட்சத்தில் தனது தந்தை தன்னை கயிறுகளினால் கட்டும் முயற்சியினை எதிர்த்து போராட போதுமான வயதையும் உறுதியையும் பெற்றிருந்தார். ஈசாக்கு இந்த நிலையில் தனது தந்தையாரின் விருப்பம் தன்னை பலியிடுவதேயாகும் என்பதனை உணர்ந்தவராக தன்னை ஒப்புக் கொடுத்தார் என்பதனையே இத்தொகுப்பு தெரிவிக்கிறது.

**வசனம் 10.** ஆபிரகாம் **தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுக்கையில்** அவருடைய இதயம் வேதனையால் நிறைந்திருக்க வேண்டும். வெட்டும்படி (שָׁחַט, *shachat,* ஷாசாட்), எனும் வார்த்தைக்கு “படுகொலை” என்பது பொருளாகும். இந்த பலிகளை குறிப்பிடும் வார்த்தையானது பலிபீடத்தில் எரியூட்டப்பட இருக்கும் விலங்கினத்தின் தொண்டைய அறுப்பதனை பொதுவாக குறிப்பிடுகிறது (லேவி. 1:5, 11), மேலும் துர் உபதேச தொழுகையில் புற ஜாதி கடவுள்களுக்கு குழந்தைகளை பலியிடுவதற்கும் இவ்வார்த்தை பயன்படுகிறது (ஏசாயா 57:5; எசே. 16:21; 23:39).

**வசனங்கள் 11, 12.** ஆபிரகாம் தன் மகன் கழுத்தில் கத்தியை ஓங்கி அடிப்பதற்கு முன்னர் **கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து** அவசர தொனியில் அவரோடு இடைப்பட்டு: **ஆபிரகாமே, ஆபிரகாமே** என கூறினார். வேதத்தில் ஒரு மனிதனின் பெயரை இரு முறை பயன்படுத்துவது உடனடி கவனத்தை ஈர்ப்பதற்கும், அவர்கள் ஈடுபட்டிருக்கிற எந்த செயலையும் உடனடி நிறுத்தவும் சொல்லப்பட்டிருக்கிறது. இது அவரை மேலும் புதிய தெய்வீக கட்டளைகளுக்கு ஆயத்தப்படுத்தியது.[8] இந்த மூதாதையரின் பதில் மறுபடியுமாக **இதோ, அடியேன்** என்பதாக இருந்தது (22:1, 7ஐ காண்க). இந்த சம்பவத்தில் இது ஒரு திருப்புமுனையாகும், ஏனெனில் தெய்வீக சோதனை தனது நோக்கத்தை முடித்து விட்டது. பிள்ளையாண்டானின் உயிருக்கிருந்த ஆபத்தை இந்த தெய்வீக தொனியானது **பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே** எனும் வேறொரு கட்டளையைக் கொண்டு தலைகீழாக மாற்றியது.

***நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன்*** [*yachid*,[9] யாசிட்] ***என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன்*** [பயபக்தி] ***என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்*** எனும் சொற்றொடர் பலரை கவலைகொள்ளச் செய்கிறது. தேவன் எதிர்காலத்தைக் காண இயலாது, ஆனால் அந்த நேரத்தில் நடப்பதை மட்டுமே அவர் அறியக் கூடுமென சிலர் இந்த வெளிப்பாட்டை வைத்து வியாக்கியானம் செய்கின்றனர். இதைப் போன்ற கருத்துக் கோணங்கள் தேவன் அனைத்தும் அறிந்தவர் என தெளிவுபட கூறும் பல வேத வசனங்களுக்கு முரண்படுகின்றது (சங். 139:1-18; யோவான் 21:17; ரோமர் 11:33-36). 22:12ல் கூறப்படும் அறிவிக்கையை எழுத்துப்பூர்வமாக எடுத்துக்கொள்ளக் கூடாது; யாவேயின் அறிவு உருவகமாக மட்டுமே அளவிடப் பட்டுள்ளது.

இதனை விவிரிக்க வேண்டுமெனில், 12 அதிகாரத்தில் ஆபிரகாமை தேவன் அழைத்ததிலிருந்து தற்போதைய வசனம் வரை அவருடைய ஒட்டுமொத்த பயண சூழலை மதிப்பாய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது. முற்பிதாவினுடைய வாழ்வின் தொகுப்பு அவர் அடிக்கடி தனது விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் போராடியிருக்கிறார் என்பதனை குறிப் பிடுகிறது. சில சமயம் அவர் தேவனுக்கு கீழப்படிந்து தனது விசுவாசத்தை போதுமான அளவு வெளிக்காட்டியிருக்கிறார், எனினும் வேறு சில சூழல்களில், அவர் விசுவாசத்தில் பலவீனராக இருந்தபடியால், இந்த முற்பிதா கீழப்படியாமலோ அல்லது பகுதியாக கீழ்ப்படிந்தோ இருந்திருக்கிறார், இந்த நிகழ்வில் தேவன் ஆபிரகாமினுடைய அர்ப்பணிப்பின் ஆழத்தை சோதித்தறிந்தார். இந்த இறுதி சோதனையில் அவருடைய மகனாகிய ஈசாக்கை பயன்படுத்தி, ஆபிரகாம் கர்த்தரை நம்புவதில் தன்னுடைய ஆவிக்குரிய வாழ்வில் போதுமான அளவு வளர்ச்சியடைந்து மற்றும் கர்த்தருக்கு இருதயத்திலிருந்து கீழ்ப்படிகிறாரா என்பதனை பார்க்க விரும்பினார். இந்த விதத்தில், தேவன் நம்மைப் போன்று, ஒரு பெற்றோர் தங்களுடைய குழந்தைகள் கடுமையாக சோதிக்கப் படுகையில் உண்மையுள்ளவர்களாகவும் கீழ்ப்படிந்தவர்களாகவும் இருக்கையில் ஏற்படும் மகிழ்ச்சியைப் போன்று அறிவார்ந்த வர்களாக மட்டுமன்றி அனுபவம் சார்ந்தவர்களாகவும் பார்க்க விரும்புகிறார்.

இந்த உரையாடல் உண்மையாகவும் இருக்கிறது. மக்கள் அவர்களின் சிலை வழிபாடு மற்றும் பாவத்திலிருந்து மனந்திரும்பாததினால் தெரிந்து கொள்ளப்பட்ட தேசம் அழிக்கப்பட்டு, சிறைபிடிக்கப்பட்டுப்போம் என்பதனை தேவன் (அறிவார்ந்த) அறிந்திருந்தார். எனினும் மனித பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் கீழ்ப்படியாமல் அழிவை சந்திக்கையில் மனந்திரும்ப மறுக்கும் போது நடப்பதைப் போன்று அது நடந்தபோது கர்த்தர் உடைந்த உள்ளத்தோடு ஏமாற்றமும் கவலையுமடைந்தார் (ஓசியா 11:1-8).

**வசனம் 13.** தேவ தூதன் பேசின பின்பு **ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டார்.** இந்த பலி விலங்கு காட்சியில் வருவது "என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்" (22:8) என்று முற்பிதா தன்னுடைய மகனுக்கு முன்பு சொன்ன வார்த்தைகளை நினைவுகொள்ளச் செய்கிறது.

**ஆபிரகாம் போய், கடாவைப் பிடித்து, அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டார்.** ஒரு தனிமனிதனுக்கு (ஈசாக்கு) பதிலாக அம்மனிதனை வாழ அனுமதித்து ஒரு விலங்கு பலியிடப்பட்டதென வெளிப்படையாக வேதத்தில் கூறப்படுவது இதுவே முதல்முறையாகும். நியாயப்பிரமாணத்தின்படி இது ஒரு பாவ நிவிர்த்தி பலியல்ல (லேவி. 1:2-9; 4:27-31), ஏனெனில் இது அந்த பிள்ளையாண்டானின் பாவத்திற்காக அல்லாமல் அவர் தன்னுடைய தந்தையின் கரத்தில் ஏறக்குறைய மரணத்திற்கு துன்புறுத்தப்பட்டார். மாறாக இது முற்பிதாவின் விசுவாசத்தை வெற்றிகரமாக சோதித்தது. இச்சமயத்தில் தேவன் "மரித்த மக்களையும் உயிரோடெழுப்பக் கூடுமென விசுவாசித்து மரித்தோரிலிருந்து அதென்னவெனில் உருவகமாக கூறுவதெனில் (NIV),[11] அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக் கொண்டார்" (எபி. 11:19). ஆபிரகாம் ஈசாக்கின் தோலை கத்தியால் அறுக்காவிட்டாலும், அவரது சரீரத்தை அறுக்க ஆபிரகாம் தன் இருதயத்தில் தீர்மானித்துவிட்டார், அவருடைய அன்பிற்குரியவர்கள் மரித்து மீண்டும் உயிரோடு எழுப்பப்பெற்றது போன்ற மகிழ்வே அவருக்கிருந்தது.

**வசனம் 14. ஆபிரகாம் அந்த இடத்திற்கு** கர்த்தர் ஏற்பாடு செய்வார் என மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கும் யாவேயீரே יְהוָה יִרְאֶה (*YHWH Yir'eh,* யாவேயீரே) என பெயரிட்டார். இச் சொற்றொடரை "கர்த்தர் பார்த்துக் கொள்வார்" (KJV ஆங்கில மொழிபெயர்ப்பு காண்க) எனவும் பொருள் கொள்ளலாம், ஆனால் 8 ஆம் வசனத்தின் காரணமாக "ஏற்பாடு செய்வார்" என்பதே உயர் உணர்வை தருகிறது. தன்னுடைய கீழ்ப்படிதலை மேன்மைப்படுத்தும் வண்ணமாக முற்பிதா அந்த இடத்திற்கு "ஆபிரகாம் கீழ்ப்படிந்தார்" என வைக்கவில்லை, மாறாக தன் மகனுக்கு பதிலாக பலியிட ஒரு ஆட்டுகடாவை கொடுத்த கர்த்தருடைய ஏற்பாட்டை மேன்மைப்படுத்தினார். இவ்விளக்கத்திற்கு கூடுதலாக இதனை வாசிப்பவர் எல்லாருக்கும் **கர்த்தருடைய பர்வதத்தில் பார்த்துக் கொள்ளப்படும் என்று இந்நாள் வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது** என மோசே விளக்கப்படுத்தியிருக்கிறார்.

## தேவனுடைய வாக்குத்தத்தம் புதுப்பிக்கப்பட்டது (22:15-19)

**15கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு: 16நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; 17நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், 18நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். 19ஆபிரகாம் தன் வேலைக்காரரிடத்துக்குத் திரும்பிவந்தான்; அவர்கள் எழுந்து புறப்பட்டு, ஏகமாய்ப் பெயெர்செபாவுக்குப் போனார்கள்; ஆபிரகாம் பெயெர்செபாவிலே குடியிருந்தான்.**

**வசனங்கள் 15, 16. வானத்திலிருந்து** மற்றொரு செய்தி வந்தது. **கர்த்தருடைய தூதனானவர்** என் பேரில் ஆணையிட்டேன் என கூறினார், **ஆபிரகாமிற்கு** கொடுக்கப்பட்ட இந்த ஆணையானது யாவேயின் நம்பகத்தன்மைமிக்க பண்பின் அடிப்படையில் சிறப்பான மதிப்பையும், குறிப்பையும் கொண்டுள்ளது என பொருளாகிறது (காண்க எரே. 22:5; 49:13; ஆமோஸ் 4:2; 6:8; எபி. 6:13-18). அதன் பின்னர் **கர்த்தர்** ஆபிரகாமிற்கு தாம் செய்த ஆணையின் காரணத்தை எடுத்துரைக்கிறார்: அதன் காரணம் என்னவெனில் **இந்த காரியத்தை செய்தபடியால்** என்பதாகும் - அதாவது அவர் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தினால் செயல்பட்டார், தன் ஒரே மகன் ஏக (தனித்துவம் வாய்ந்த) சுதன் **என்றும் பாராமல்** தன் கையாலே ஈசாக்கின் மரணம் நிகழுமென அவர் நினைத்தார்.

**வசனம் 17.** ஆபிரகாம் தன் செயல்களால் இறுதி நம்பிக்கையை வெளிப்படுத்தினபடியால், கர்த்தர் தாம் முன்பு செய்திருந்த வாக்குத்தத்தங்களை மறுபடியும் வலியுறுத்தினார். இம்முறை வாக்குத்தத்தங்கள் தேவனுடைய மாறாத பண்பின் மீது உத்திரவாதம் பண்ணப்பட்டது. **நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங் களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன்** என்பதாக வாக்குத்தத்தமானது இருந்தது. முன்பு கூறப்பட்ட சூழல்கள் இருந்தது போன்றே “சந்ததி” (זֶרַע, *zera‘,* சேரா) எனும் பதம் எபிரெய மொழியில் ஒருமையில் உள்ளது; ஆனால் பல சமயங்களில் இங்கு

குறிப்பிட்டிருப்பது போன்று “வழிமரபினர்” (NIV) அல்லது “பிள்ளைகள்” (NRSV) எனும் கூட்டுப் பொருளை கொண்டுள்ளது. “வானத்து நட்சத்திரங்கள்” “மற்றும் கடற்கரை மணல்” ஆகியவை எண்ணிக் கையற்ற சேனை என்பதனை தெளிவாக சித்தரிக்கிறது (13:16; 15:5; 26:4; 28:14; 32:12).

முற்பிதாவின் சந்ததிகள் **சத்துருக்களின் வாசல்களை சுதந்தரிப்பார்கள்** என கூறப்படும் வாக்குத்தத்தமானது “சினையாகு பெயர்” எனும் உருவக பேச்சில் கூறப்பட்டுள்ளது, அதாவது முழுவதையும் (பட்டணத்தையும்)[12] குறிக்க ஒரு பகுதியை (வாசலை) குறிப்பிடுவதாகும். ஒரு பட்டணத்தை கைப்பற்ற அடிப்படை என்னவெனில் அதன் வாசலை தீயிட்டுக் கொளுத்துவது அல்லது பீரங்கியால் நாசமாக்குவதாகும். வாக்குத்தத்தத்தின் இப் பகுதியானது இஸ்ரவேலர்கள் கானான் நாட்டினை கைப் பற்றுவதனை எதிர்நோக்குவதாக இருக்கிறது, அக்கைப் பற்றுதலானது யோசுவாவில் தொடங்கினது ஆனால் தாவீதின் பேராட்சி காலம் வரை நிறைவு பெறவில்லை.

**வசனம் 18.** யாவேயினுடைய வாக்குத்தத்தத்தின் பிற்பகுதியானது **உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்** என்பது இவ்வுலகத்திற்கு வந்த தாவீதின் பெருமகனான இயேசு வரும் வரை நிறைவேறவில்லை (மத். 1:1-17). அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக அவருடைய மேசியாத்துவம் நிரூபிக்கப்பட்டது (அப். 2:29-36; ரோமர் 1:1-4), வாக்குப்பண்ணப்பட்ட “சந்ததி” எனப்படுவது விசுவாசத்தால் ஞானஸ்நானம் மூலம் கிறிஸ்துவிற்குள் ஐக்கியப்படுகிற அனைவரையும் உள்ளடக்கி விரிவுப்படுத்தபட்டது. எல்லா ஜாதிகளிலுமிருந்து மனமாற்றம் பெற்றவர்கள் ஆபிரகாமின் “சந்ததி” (வழிமரபினர்) என்றும் தேவனுடைய வாக்குத் தத்தத்தின்படி “சுதந்திரவாளிகளாவும்” எண்ணப்படுகிறார்கள் (கலா. 3:8, 9, 26-29), ஆனால் இந்த வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதனைப் பார்ப்பதற்கு வாழ்ந்திருக்கமாட்டார், எனினும் என்றாவது அதனை நிறைவேற்றுவாரென்று (எபி. 6:13, 14) “தம் மீது ஆணையிட்ட” யாவே மீது கொண்டுள்ள விசுவாசத்தில் தொடர்ந்து நடக்க வேண்டியதாக இருந்தது.

எல்லா தேசங்களும் ஆபிரகாம் சந்ததி மூலமாக ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் சொன்னார், காரணம் யெகோவாவுடைய **சத்தத்திற்கு** அவன் **கீழ்ப்படிந்தான்.** முன்னதாக, முழுவதும் கர்த்தருடைய சித்தமும் மற்றும் நோக்கங்களின் அடிப்படையிலேயே இந்த வாக்குத்தத்தங்கள் இருந்துள்ளன. இந்த நிலைக்குப் பின்பு, அவைகள் யெகோவாவினுடைய சித்தம் மற்றும் முற்பிதாக்களின் கீழ்ப்படிதல் ஆகிய இரண்டும் அவசியமாகிறது. ஆபிரகாமிற்குப் பின்பும் மற்றும்

ஆதியாகமத்தின் தொகுப்பும், கானான் தேசத்தில் தங்களை உருவாக்க முயற்சிக்கவும் மற்றும் அங்கே தங்களை நிலைநிறுத்தும் போதும் முற்பிதாக்களின் சந்ததிகளுக்கு கீழ்ப்படிதல் அவசியமாகிறது (உபா. 6:4-15; 11:13-17; 30:15-20). ஈசாக்கை பலியிடுதல் - இந்த உச்சநிலை சோதனையின் போது ஆபிகாமின் கீழ்ப்படிதலின் விசுவாசம் - எல்லா விசுவாசிகளின் சோதனை நேரத்தின் போதும் விசவாசத்தின் நிலையாக உள்ளது.

**வசனம் 19.** ஆட்டுக்குட்டியை பலியிட்ட பின்பு, **ஆபிரகாம் தன் வேலைக்காரரிடத்துக்குத் திரும்பிவந்தான்; அவர்கள் எழுந்து புறப்பட்டு, ஏகமாய்ப் பெயெர்செபாவுக்குப் போனார்கள்.** "ஆபிரகாம் தன் வேலைக்காரரிடத்துக்குத் திரும்பிவந்தான்" என்பதே இந்தப் சம்பவத்தின் சிறிய முடிவுரையாகக் காணப்படுகிற உண்மையானது, பல நூற்றாண்டுகளாக விளக்கவுரையாளர் களுக்கு குழப்பத்தை உண்டுபண்ணுகிறது. இந்த வாக்கியத்தில் ஈசாக்கு தவிர்க்கப்பட்டது குறித்து ரபீக்கள் போதகர்கள் அநேக அழகான விளக்கங்களை கொடுத்திருக்கிறார்கள். உண்மையில் பாவ நிவாரண பலியாக தன் மகனை முற்பிதா கொடுத்திருப்பார் என்று சிலர் கருதுகின்றனர். ஆபிரகாம் அவனைக் கொன்றான், கர்த்தர் அவனை மரணத்திலிருந்து எழுப்பினார், தேவதூதர்கள் அவனை பரலோகத்திற்கு எடுத்துச் சென்றான் என்று மற்றவர்கள் போதிக்கிறார்கள். இதனுடன் கூடுதலாக, "ஈசாக்கு எங்கே போனான்?" என்ற கேள்விக்கு மற்றவர்களுடைய பார்வையில் பதில் கண்டுபிடிக்க முயற்சிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தின் இறுதியில் ஈசாக்கு ஏன் தவிர்க்கப்பட்டான், மற்றும் இரண்டு உத்திரவாதமற்ற காரணங்களுக்காக விவரிக்க அநேகர் முயற்சிக்கின்றனர். முதலாவதாக, சம்பவத்தின் இறுதியில் ஈசாக்கு தவிர்க்கப்பட்டுள்ளது போல், சம்பவத்தின் முற்பகுதியில் சாராள் தவிர்க்கப்பட்டுள்ளாள். தொடர்ச்சியாக, மோரியா மலைக்கு ஆபிரகாமும் ஈசாக்கும் பிரயாணப்படுவதற்கு முன்பு சாராளின் உணர்வுகள், கருத்துக்கள், சிந்தனைகளை வெளிப்படுத்துவது ஆசிரியரின் நோக்கமில்லை. கடும் சோதனையிலிருந்து திரும்பிய பின்பு தன் மகனைக் குறித்த அந்த காரியங்கள் முக்கியமானதாகவும் அவர் சிந்திக்கவில்லை.

இரண்டாவதாக, இந்த சம்பவத்தின் இறுதியில் ஈசாக்கு தவிர்க்கப்பட்டிருத்தல் குறித்த பார்வையானது, வாசகர்களை சம்பவத்தின் மையத்திற்கு செல்லும் கவனத்தை திருப்புவதாக இருக்கிறது. ஈசாக்கின் மன நிலையையோ அல்லது அவனும் அவன் அப்பாவும் பெயெர்செபாவுக்கு திரும்பிய நிலையில் அவன் என்ன சொல்லியிருப்பான் என்று பதிவு செய்வது இந்த தொகுப்பின் நோக்கம் அல்ல. மாறாக, வாக்குப்பண்ணப்பட்ட பிள்ளை, தன் குமாரனாகிய ஈசாக்கை பலியிடுதல் என்ற சிந்தனைக்கு அப்பாற்பட்ட சோதனைக்குள்

ஆபிரகாமை இட்டுச் சென்ற விசுவாசத்தை முன்னிலைப்படுத்துவதே இந்த சம்பவத்தின் உண்மையான காரணம் ஆகும். அவனுடைய அற்புதமான நம்பிக்கையையும் மற்றும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் தேவனுக்கு கீழ்ப்படிதலையும் இந்தத் தொகுப்பு நமக்குப் போதிக்கிறது, இது தான் வருங்கால விசுவாசிகளுக்கு உண்மையுள்ள தகப்பன் என்ற நிலையை உருவாக்கியுள்ளது. அவனைப் போல் விசுவாசிப்பவர்கள், அவனுடைய சந்ததியாகி விடுவார்கள்.

## ஆபிரகாமின் குடும்பம் பற்றிய செய்தி அறிக்கை (22:20-24)

**[20]இந்தக் காரியங்கள் நடந்த பின்பு, ஒருவன் ஆபிரகாமிடத்தில் வந்து: மில்க்காளும் உன் சகோதரனாகிய நாகோருக்குப் பிள்ளைகளைப் பெற்றாள்; [21]அவர்கள் யாரென்றால், முதற்பேறான ஊத்ஸ், அவன் தம்பியாகிய பூஸ், ஆராமுக்குத் தகப்பனாகிய கேமுவேல், [22]கேசேத், ஆசோ, பில்தாஸ், இத்லாப், பெத்துவேல் என்பவர்கள்; பெத்துவேல் ரெபெக்காளைப் பெற்றான் என்று அறிவித்தான். [23]அந்த எட்டுப்பேரை மில்க்காள் ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோருக்குப் பெற்றாள். [24]ரேயுமாள் என்று பேர்கொண்ட அவனுடைய மறுமனையாட்டியும், தேபா, காகாம், தாகாஸ், மாகா என்பவர்களைப் பெற்றாள்.**

ஆபிரகாமின் தகப்பனாகிய தேராகுவிற்கு, மேலும் இரண்டு குமாரர்கள் இருந்தனர்: நாகோர் மற்றும் ஆரான். குடும்பமானது கானானுக்கு புறப்படும் முன்பே ஆரான் ஊர் என்னும் இடத்தில் மரித்துவிட்டான் (11:27, 28). அதிகாரங்கள் 12 முதல் 19 வரை ஆரானின் குமாரனாகிய லோத்து குறித்த சில சம்பவங்களை ஆதியாகமத்தின் ஆசிரியர் கொடுத்துள்ளார். தற்காலிகமாக, அவர் பின் சென்று நாகோரிடம் வந்தார் அவனுடைய பேத்தியாகிய ரெபெக்காளை அறிமுகம் படுத்தினார், பின்பு ஈசாக்கை சந்தித்து திருமணம் செய்து கொண்டாள் (அதிகாரம் 24).

**வசனம் 20.** ஆபிரகாமின் **சகோதரனாகிய நாகோர்** குறித்து வந்த செய்தியானது ஈசாக்கு பலியிடுதல் சம்பவத்திற்கு சில வாரங்களுக்குப் பதிலாக, சில வருடங்கள் கழித்தே வந்திருக்கும். **இந்த காரியங்கள் நடந்த பின்பு** என்ற பதமானது அவனுடைய சகோதரனின் குடும்பம் ஆரானுக்கு திரும்பியது குறித்து, முற்பிதாவிற்கு தெரியப்படுத்தும் முன்பு அருதியிட்டு கூற முடியாத காலத்தை குறிப்பிடுகிறது, பிரயாணி ஒருவர் மூலம் இந்த செய்தி வந்திருக்க சாத்தியக் கூறுகள் உள்ளன. ஆரானின் குமாரத்தியாகிய **மில்க்காள்** (11:29). ஆபிரகாமின் சகோதரனாகிய நாகோருக்குப் **பிள்ளைகளை பெற்றாள்** என்பது ஆபிரகாமிற்கு அதிர்ச்சி யளிப்பதாகத் தெரிகிறது. ஆதாரப் பூர்வமாக, ஆரானில் பிரியும்போது சகோதரனுக்கும் பிள்ளைகளில்லாதிருந்தது, ஆனால் பிற்காலத்தில்,

இருவரும் தகப்பனானார்கள். சாராளை விட மில்க்காள் மிகவும் இளையவள் என்று தெரிகிறது. அவள் எட்டு குமாரர்களை பெற்றிருந்தார், ஆனால் சாராளோ ஒரே ஒரு குமாரனைப் பெற்றிருந்தாள்.

**வசனங்கள் 21, 22. ஊத்ஸ்** மில்க்காளின் **முதற்பிறப்பாக** இருந்தான். “ஊத்ஸ்” தேசங்களின் பட்டியலுடன் தன் சொந்தப் பெயரோடு அவன் குழப்பிக்கொள்ளக்கூடாது, இவன் ஆராமின் சந்ததியாவான். ஊத்ஸ் என்பது பழைய ஏற்பாட்டில் ஒரு இடத்தின் பெயராகவும் குறிப்பிடப்பட்டுள்ளது (10:23ன் விளக்கவுரையைக் காண்க).

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள **பூஸ்** என்பவர் யாக்கோபின் குமாரனாகிய காத்தின் சந்நதி அல்ல (1 நாளா. 5:11, 14). இந்தப் பெயர் ஒரு இடத்தையும் குறிப்பிடுகிறது. யோபுவிற்கு ஆலோசனை கொடுத்த, எலிகூ என்பவன் பூஸிலிருந்து வந்தவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (யோபு 32:2), இதை அரேபி யாவிலுள்ள தேதான் மற்றும் தேமா உடன் எரேமியா தொடர்புபடுத்தியுள்ளார் (எரே. 25:23).

**கேமுவேல்** என்ற இதேப் பெயர் வேறு இடங்களில் தொடர்பில்லாதவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது (எண். 34:24, 1 நாளா. 27:17). 10:22ல் சேமின் சந்ததியிலிருந்து வந்த வித்தியாசமானவர், **ஆராமின் தகப்பன்** என்பது தவிர வேறு எதுவும் இவனைக் குறித்து அறியப்படவில்லை. ஆயினும், ஆராம் என்ற பெயர் அரமேயன் என்று உருவெடுத்தது அது ஆரானிலுள்ள நாகோரின் கிளையுடன் இணைகிறது.

**கேசேத்** என்ற பெயர் பழைய ஏற்பாட்டில் வேறு எங்கும் காணப்படவில்லை. இது உச்சரிப்பினால் கல்தேயர்களுடன் தொடர்புபடுகிறது, அவர்கள் தான் கி.மு. ஏழாம் நூற்றாண்டின் துவக்கத்தில் நேபுகாத்நேச்சாரின் கீழ் பாபிலோனிய இராஜ்ஜியத்தை உருவாக்கியவர்கள். **ஆசோ, பில்தாஸ், இத்லாப்**, என்பவர்கள் ஆதிகால இலக்கியத்தில் மட்டுமே காணப் படுகிறார்கள்.

**பெத்துவேல்** என்பவர் நாகோருக்கு மில்க்காள் பெற்ற எட்டு பெயர் பட்டியலில் கடைசி நபராவார். அவருடைய பெயரின் அர்த்தம் “தேவனுக்குள் வாசம்பண்ணுகிறவர்” அல்லது “தேவனுடைய மனிதன்”[13] என்பதற்கு சமமானது ஆகும். 25:20ல் பெத்துவேல் “அரமேயன்” என்று அடையாளப்படுத்தப்படுகிறார், அவர் பதான்அராமில் தங்கியிருந்தார் (வடமேற்கு மெசெப் பெத்தோமியா).

**வசனம் 23. பெத்துவேல் ரெபெக்காள்** மற்றும் லாபான் என்பவர்களின் **தகப்பன்** ஆவார் (24:15, 47; 28:5). அடுத்த வாக்கியத்தில் ரெபெக்காள் மட்டுமே நாகோரின் பெண் சந்ததியாக குறிப்பிடப்படுகிறார். அதிகாரம் 24ல் ரெபெக்காளின் அறி முகமானது ஈசாக்குடனான அவளுடைய திருமணத்திற்கு வாசகர்களை ஆயத்தப்படுத்துகிறது.

**வசனம் 24.** நாகோர், தன் சகோதரன் ஆபிரகாமைப்போன்று, **மறுமனையாட்டியைக் கொண்டிருந்தான், அவள் பெயர் ரேயுமாள்.** ஒரு மறுமனையாட்டி என்பவள் ஒரு அடிமைப் பெண்ணா யிருந்தாள், அவள் இரண்டாம் தர மனைவி ஆவாள், வழக்கமான மனைவியை விட சில சட்டப் பூர்வ உரிமைககளைக் கொண்டிருப்பாள் (16:3ன் விளக்கவுரையைக் காண்க). ஆயினும், தன் கணவனின் குடும்பத்தின் அங்கமானதால், அவளுடைய குமாரர்களும் தங்கள் தகப்பனுடைய சுதந்திரத்தில் பங்கு பெறுவர்.[14] ரேயுமாள் நான்கு குமாரர்களைப் பெற்றாள்: **தேபா, காகாம், தாகாஸ், மாகா.** இவர்களைக் குறித்து கொஞ்சமே அறியப்படுகிறது, ஆனால் இவர்களுடைய பெயர் நவீன லெபனான் மற்றும் சீரியா பல்வேறு பகுதிகளோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.[15] தனது மனைவி மூலம் எட்டு குமாரர்களும் மற்றும் தனது மறுமனையாட்டி மூலம் நான்கு குமாரர்களையும் பெற்றார். நாகோர் மொத்தமாக பன்னிரண்டு குமாரர்களைக் கொண்டிருந்தார்.

## நடைமுறை

### ஆபிரகாமின் விசுவாசம் (அதிகாரங்கள் 12-22)

கல்தேயருடைய ஊர் பகுதியிலுள்ள தன் சொந்தங்களை விட்டுவிட்டு கானான் தேசத்திற்கு போக ஆபிரகாம் அழைக்கப்பட்டது முதல், தேவனுக்கு செவிகொடுத்து அவருக்குக் கீழ்ப்படிவதனால் தன் விசுவாசத்தை வளர்த்துக் கொண்டான்.

ஆபிரகாமும் அவன் பரிவாரமும் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் அநேக நாள் தங்கவில்லை, பஞ்சம் காரணமாக எகிப்திற்கு அவர்கள் சென்றுவிட்டனர். அங்கே தன் மனைவியை சகோதரராக பார்வோனிடம் அவன் பொய் சொன்னான் (12:10-20). வருடங்களுக்குப் பின்பு, கேரார் இராஜாவிடமும் இதே போன்று ஆபிரகாம் செய்தார் (20:1-18). ஒரு கட்டத்தில், இயற்கையாகவே குமாரனைப் பெறுவதில் நம்பிக்கை இழந்தவனாய், தன் வேலைக்காரன் எலியாசரின் மகனை தனது வாரிசாக தத்தெடுக்க முயற்சித்தான் (15:1-4). பின்பு, சாராளின் ஆலோசனையைக் கேட்டு ஆகாரை தன் அடிமை மனைவியாக எடுத்து அவள் மூலம் தனக்கு ஒரு குமாரனைப் பெற்றான் (16:1-4). இஸ்மவேல் பிறந்த பின்பு, இவன் தனது வாக்குப்பண்ணப்பட்ட குமாரனாக ஏற்றுக் கொள்ளப்பட தேவனிடம் வேண்டினான். ஒரு வயதான மனிதனாக, நீயும் உன் மனைவி சாராளும் ஒரு குமாரனைப் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன போது, அவிசுவாசத்தினால் சிரித்தான் (17:1, 15-19).

சில வேளைகளில், முற்பிதாவின் விசுவாசம் தள்ளாடியுள்ளது, மற்றும் அவனுடைய கீழ்ப்படிதல் பரிபூரணத்தை விட தூரமா

யிருந்துள்ளது. இருப்பினும், ஆபிரகாமின் அனுபவங்கள் ஊடே, தேவன் அவனுக்கு உண்மையாயிருந்தார், பொன், வெள்ளி, மந்தைகள், மற்றும் விளை நிலங்களாக நல்ல ஆசீர்வாதங்களைக் கொடுத்தார். முற்பிதாவின் விசுவாசம் பலவீனமாயிருந்த போது, அவன் ஊர் மற்றும் ஆரானில் இருந்த போது கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

முற்பிதா தம்மில் விசுவாசமில்லாதவனாக இருந்தாலும்கூட, யாவே எப்போதும் ஆபிரகாமில் விசுவாசமாய் இருந்தார். பின்பு கிழக்கத்திய நான்கு இராஜாக்களை ஆபிரகாமின் ஆட்கள் தோற்கடித்தனர் (14:8-16), கர்த்தர் தமக்கு பயப்படுகிற வேலைக்காரனிடம் சொன்னார், "நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்" (15:1). ஆபிரகாம் தொண்ணூற்றொன்பது வயதும், சாராள் எண்பத்தொன்பது வயதுமாயிருந்தபோது, அவர்கள் ஒரு குமாரனைப் பெறுவார்கள் என்று தேவன் அவர்களுக்கு மீண்டும் உறுதிப்படுத்தினர். தேவன் தம்மை எல்-ஷடாய் அல்லது "வல்லமையுள்ள தேவனாக" தோன்றத் துவங்கினார் (17:1-8, 15-19). சில காலம் பின்பு, ஆபிரகாமும் சாராளும் ஒரு குமாரனைப் பெறுவார்கள் என்று தேவன் மீண்டும் மீண்டும் கூறினார் (18:10). அவிசுவாசத்தினால் அவளும் கூட சிரித்தாள். அடுத்த வருடம் ஒரு ஆண் பிள்ளை பிறப்பார் என்று குறிப்பிட்டு, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தை மீண்டும் மீண்டும் சொன்னார். கர்த்தரால் "ஆகாத காரியம் உண்டோ" என்று கூறி அவர் முடித்து வைத்தார் (18:9-15).

யாவேவின் வாக்குத்தத்தங்களாலும் உண்மையாலும், ஆபிரகாமின் விசுவாசம் கொஞ்சம் கொஞ்சமாக பலப்பட்டது. தன்னுடைய சரீரமும், சாராளின் சரீரமும் மரித்த அளவில் உள்ளது மற்றும் புது உயிர் உற்பவித்தல் குறித்து கவலை கொள்ளும் நிலையில் இருந்தபோதும், அவன் தேவனை நம்பக் கற்றுக் கொண்டான், "மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு …" (ரோமர் 4:17). அவன் தன் நம்பிக்கையை கர்த்தருடைய வல்லமை மற்றும் உண்மையின் மேலும் வைத்தான். நாம் படிக்கிறோம்:

> அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, … உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்ட படியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; … தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவரா யிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் (ரோமர் 4:18-21).

ஆதியாகமம் சொல்கிறது, கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள்பேரில் கடாட்சமானார்; கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளினார். ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில், சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள் (21:1, 2). அநேக வருடங்கள் மலட்டுத் தன்மையின் சோகத்தில் பாடுபட்ட பின்பு சாராளுடைய விசுவாசம் நியாயப்படுத்தப்பட்டது. ஆனால் இம்முறை அவிசுவாசத்தினால் அல்லாமல் சந்தோஷத்தினால் சிரித்தாள். தன்னோடு மகிழ்ச்சியைக் கொண்டாடும்படிக்கு, இந்த அற்புதமான நிகழ்வை குறித்து அறிய விரும்பிய அனைவரையும் அழைத்தாள் (21:6).

ஆபிரகாம் மற்றும் சாராளுடைய விசுவாசமானது எல்லா வயது தேவனுடைய பிள்ளைகளுக்கும் சமமான முன்னுதாரணமாக உள்ளதாக எபிரெய ஆசிரியர் பயன்படுத்துகிறார் (எபி. 11:8-12). வயதான இரண்டு சரீரங்களில் உயிரணுக்களை உயிர்ப்பித்து ஈசாக்கைப் பிறக்கச் செய்தல் என்பது தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறுதலின் விளைவை அனுபவித்த பின்பு அவர் வல்லமையுள்ள தேவன் என்பதில் உறுதியாயிருந்தனர்.

மிக நீண்ட காலங்களின் எதிர்பார்ப்பிற்குப் பின்பு வாக்குப்பண்ணப்பட்ட குமாரனாகிய ஈசாக்கைப் பலியிட தேவன் சொன்னபோது, உச்சகட்ட சோதனையை ஆபிரகாம் சந்தித்தார் (22:1-14). கேள்வியே இல்லாமல், பலி பீடத்தில் தனது குமாரனை செலுத்த ஆபிரகாம் மோரியாவிற்கு சென்றான். அவனுடைய கையை தேவன் நிறுத்தினபோது அவன் கையில் ஒரு கத்தி இருந்தது. இந்தத் தருணத்தில் முற்பிதா முற்றிலும் தேவனில் நம்பிக்கை வைத்தார், அதாவது மரணத்திலிருந்து உயிர்ப்பிக்க அவர் வல்லவர் என்பதை அவன் அறிந்திருந்தான். அவனுடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் விளைவாக, ஆபிரகாம் தாராளமாக ஆசீர்வதிக்கப்பட்டான் மற்றும் விசுவாசத்தின் தகப்பனாகவும் ஆனான் (ரோமர் 4:16).

## நம்முடைய விசுவாசத்தின் சோதனை (22:1-14)

சோதனை அல்லது பரீட்சையைக் கடந்து செல்வது என்பது ஒரு சுகமான அனுபவமில்லை, ஆனால் அது அவசியமானது. ஒருவர் பள்ளியில் பிரதானப்பாடத்தையும், புதிய வேலைக்கான பயிற்சியும் கடந்து செல்லுவதாக இருந்தாலும் அல்லது நம்பிக்கைக்குப் பாத்திரமான தொழிலாளியாக போட்டியின் மத்தியில் தயாரிப்பை அதிகரிக்கப் போராடுவதாக இருந்தாலும் நிஜமானதாகும். அதுபோன்று, தேவனுடனான அர்ப்பணிப்பை உயர்ந்த நிலையில் செயல்படுத்தவும் மற்றும் ஆவிக்குரிய வாழ்வில் வளர்வதற்கும் விசுவாச வாழ்க்கையின் சோதனை அல்லது பயிற்சி அவசியமானதாகும். சரீர தசைகளை வலுப்படுத்த பளுத்தூக்கும் வீரர் தடை நிறைந்த ஒன்றில்

செயல்படுவது அவசியமாகும். இதே போன்று, அழிவின் கடலில் நம்மை அமிழ்த்தக்கூடிய அக்கிரமத்தின் துன்பத்தின் ஊடே நீந்தி செல்வதற்குத் தேவையான ஆவிக்குரிய தசைகளை பலப்படுத்த உதவும்படிக்கு, தேவன் நம்மை சோதிக்கின்றார் அல்லது நம்மை சோதிக்கும்படிக்கு சாத்தானை அனுமதிக்கிறார்.

எபிரெய அல்லது கிரேக்க மொழிகள் இரண்டிலும் ஒரே மூல வார்த்தை “சோதனை” (தவறான எண்ணத்தில்) என்றும், அடிக்கடி பரீட்சை (நல்ல எண்ணத்தில்) என்றும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது, மேலும் பயன்படுத்தப்பட்டுள்ள வாக்கியத்தின் மையக் கருத்து மட்டுமே உறுதிப்படுத்தும்.[16] வசனம் போதிப்பது என்னவென்றால் விசுவாசிகள் பாவம் செய்யும்படிக்கு சாத்தான் சோதித்து ஆவிக்குரிய அழிவை ஏற்படுத்துகிறான் (மத். 4:1-11; மாற்கு 1:13; 1 கொரி. 7:5; 1 தெச. 3:5; யாக். 1:13-15). ஆயினும், தேவன் தமது ஜனங்களை பலப் படுத்தும்படிக்கும், அவர்கள் தங்கள் விசுவாசத்தை அவருக்கு நிரூபிக்கும் விதமாகவும் அவர்களை சோதிக்கிறார் (22:1; யாத். 20:20; உபா. 8:2; யோவான் 6:6; 1 கொரி. 10:13; எபி. 11:17; யாக். 1:2-4, 12).

*காரணமே இல்லாதவைகளையும் மற்றும் கடினமான கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி கேட்பது மூலம் தேவன் ஜனங்களை சோதிக்கிறார்* (22:1, 2). ஆபிரகாமுக்கு, யாவேயின் கட்டளைப்படி மோரியா மலையில் வாக்குப்பண்ணப்பட்ட குமாரனாகிய ஈசாக்கை பலியிடுவதைவிட, வேறு எதுவும் பெரிதாகவோ அல்லது காரணமாகவோ ஒன்றுமில்லை. இருப்பினும், முற்பிதாவிற்கு தேவன் கொடுத்த கடினமாக கட்டளை இதுவே முதல் அன்று. பல சூழ்நிலைகளில் பரீட்சை என்ற பதம் காணப்படவில்லை, அதாவது கல்தேயர்களாகிய ஊர் மற்றும் ஆரானிலிருந்து தேவன் ஆபிரகாமை அழைத்தது மூலம் தேவன் பரீட்சிக்கத் துவங்கிவிட்டார். இரண்டு சம்பவங்களிலும் தங்கள் குடும்பத்தை விட்டுவிட்டு கானான் தேசத்திற்குப் போகும்படிக்கு தேவன் அவனுக்குச் சொன்னார் (11:31; 12:1-4; அப். 7:2-4). இரண்டு சம்பவங்களிலும் அவன் தனது குடும்பத்தை ஒரு பகுதியைக் கூட்டிச் சென்றது மூலமும், மற்றும் ஆரானில் அநேக வருடங்கள் தங்கியிருந்தபடியினாலும், அவன் கட்டளைகளின் ஒரு பகுதிக்கே கீழ்ப்படிந்தான், இந்த பரீட்சைகளில் அவன் அதிக மதிப்பெண் எடுத்திருந்திருக்கமாட்டான் என்று நாம் சொல்லலாம்.

இறுதியாக முற்பிதா வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் சேர்ந்தாலும், பஞ்சத்தின் நிமித்தமாக அவன் அங்கே அநேக காலம் தங்கவில்லை. அவன் எகிப்திற்கு சென்றான், அங்கே பார் வோனிடம் சாராளை தனது மனைவி என்பதற்குப் பதிலாக, சகோதரி என்று பொய் சொன்னான் (12:10-20). பல வருடங் களுக்குப் பின்பு, பாலஸ்தீனத்தின் இராஜாவும் கேராரின் இராஜாவுமாகிய அபிமெலேக்குவிடம் அதே பொய்யை

திரும்பவும் சொன்னான் (20:1-18). இந்த இரண்டு சோதனைகளிலும் அவன் தோற்றுப்போனான்.

மேலும் சாராளின் திட்டமாகிய தனது வேலைக்காரியாகிய, ஆகார் மூலம் ஒரு குமாரனை பெறுவதற்கும் தன்னை அர்ப் பணித்தான் (16:1-4). அவன் தொண்ணூற்றொன்பது வயதாயும், சாராள் எண்பத்தொன்பது வயதாயிருக்கும்போது, அடுத்த வருடம் அவர்கள் ஒரு குமாரனைக் கொண்டிருப்பார்கள் என்று தேவன் சொன்னார். இந்த தெய்வீக அறிவிப்பிற்கு அவன் அவிசுவாசத்தில் முகம் குப்புற விழுந்து நகைத்ததையே பதிலாகக் கொடுத்தான். இஸ்மவேலை வாக்குத்தத்தத்தின் பிள்ளையாக ஏற்றுக்கொள்ளும் படிக்கு அவன் கர்த்தரிடம் வேண்டினான் (17:15-19).

இந்த எல்லாவித உதாரணங்களிலும், தெய்வீக சோதனையில் ஆபிரகாம் தோற்றுப்போனான். அவிசுவாசத்தினால் தேவனுக்கு எதிராக தன் இருதயத்தை கடினப்படுத்தினதின் நிமித்தம் அவன் தோற்றுப் போகவில்லை. எதிர்மறையாக, அவன் இன்னமும் கர்த்தரில் விசுவாசித்து அவருடைய சித்தம் செய்ய விரும்பினான். ஆயினும், கடினம் மற்றும் திகிலூட்டும் சூழ்நிலைகளில், தேவனுடைய வழியைவிட, தங்கள் சொந்த வழியான காரண காரியங்கள், தர்க்க ரீதியில் சரியானது மற்றும் தன் வசதிக் கானவைகளையே முற்பிதாக்கள் சிந்தித்ததாக காணப்படுகிறார்கள். அவன் "தரிசித்து நடப்பதைவிட," "விசுவாசித்து நடப்பது" எவ்வாறு என்று கற்றுக்கொள்ள வேண்டியவனாயிருந்தான் (2 கொரி. 5:7).

இந்த வயதான கால பிரச்சனை இன்னமும் நம்மிடம் உள்ளது. நமக்கு முன்னாக இருக்கும் அபாயங்களைக் காண தோற்றுப்போவதால், நாம் சிலவேளைகளில் தடுமாறுகிறோம் மற்றும் விழுந்துவிடுகிறோம், அல்லது நமக்கு முன்பாக கர்த்தர் வைத்துள்ள அந்த வழியைவிட நாம் அறிந்த வழியை பின்பற்றுவதில் நாம் உறுதியாயிருக்கிறோம். ஞானமுள்ள மனிதன் கவனமாயிருப்பது, "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரணவழிகள்" (நீதி. 14:12).

இயேசு தம்மை பின்பற்றுகிறவர்களுக்கு அடிக்கடி கடினமான செயலை செய்யச் சொல்வார், அது மனிதனுடைய பார்வை யிலிருந்து பார்க்கும்போது மிகவும் கடினமானதாகவும், மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாததும், செய்ய முடியாததுமாகக் கூட காணப்படலாம்.

1. ஒரு தருணத்தில், தம்முடைய சீஷராக ஆர்வமாயிருந்த சீஷனைப் பார்த்து "என்னைப் பின்பற்றி வா" என்று சொல்லி அவர் சோதித்தார். அந்த மனிதனுடைய பதில், ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும், நீ போய் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி ..." என்று

சொல்லி அவனை மீண்டும் சோதித்தார் (லூக். 9:59, 60). ஆதியில் கிழக்கத்திய தேசங்களில், தங்கள் பெற்றோரை நல்ல முறையில் அடக்கம்பண்ணுவது மூலம் அவர்களுக்கு கனத்தை செலுத்துதல் அவர்களுடைய பரிசுத்த வேண்டுதலாயிருந்தது. உண்மையில், அந்த மனிதனுடைய தகப்பன் உண்மையில் மரித்துவிட்டானா அல்லது மரணத் தருவாயில் இருக்கிறானா, அல்லது நல்ல உடல் நிலையுடன் இருக்கிறானா என்று நமக்குத் தெரியாது, ஆனால் எதுவாயினும், குடும்பப் பொறுப்புகளைவிட, தேவனுடைய ராஜ்யம் பிரசங்கிக்கப்படுவது அவசியமாயிருக்கிறது.

2. தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு இயேசு கொடுத்த அதிர்ச்சிகரமான அறிவிப்பு: "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்கா விட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக். 14:26). ஆயினும், மத்தேயு, இதற்கு இணையான இயேசுவின் கூற்றை வழங்கியுள்ளார். அது தன்னைக் கேட்பவர்களுக்கு குறைந்த அதிர்ச்சியை அளித்தாலும், ஆனால் அது வேண்டுவதில் குறைவில்லை. ஆகவே வெறுப்பு என்ற பதத்திற்கு பதிலாக, லூக்காவைப் போல் தனது தொகுப்பில் பின்வருமாறு கூறுகிறார்: "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக் கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல." (மத். 10:37). இவ்வாறு செய்வது மூலம் மத்தேயு எபிரெய பதமான "שָׂנֵא (*śane'*, சானே) வைப் பயன்படுத்தி விளக்குகிறார், அது புதிய ஏற்பாட்டின் வெளிப்படையான வார்த்தை, "வெறுப்பிற்கு" பின்னாக நிற்கிறது. இதே சூழ்நிலையில், "சானே" என்பது ஒரு நபரை நேராக வெறுத்தல், தீய நோக்கம், இயல்பான கடும் பகைக்குப் பதிலாக "குறைவாக நேசி" என்று அர்த்தம் கொள்ளும். ஆகவே, ஆதியாகமம் 29:31, 33ல் லேயாளை யாக்கோபு வெறுப்பதாக (சானே) என்று இரு முறை கூறுவது மூலம், KJV மொழிபெயர்ப்பாளர்கள் தங்கள் வாசகர்களுக்கு பிரதிகூலம் செய்துள்ளனர். உண்மையில், ஆதியாகமம் 29:30ல் தெளிவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது, யாக்கோபு லேயாளை நேசித்தான், ஆனால் ராகேலைப் போன்று அல்ல. இதே போன்ற அர்த்தத்தையே இயேசுவின் கூற்றும் கொண்டுள்ளது என்ன வென்றால் எந்த ஒரு - பெற்றோர்களோ, சகோதரர்கள் - அல்லது தன்னுடைய வாழ்வு கூட நாம் கர்த்தருடன் கொண்டுள்ள அர்ப்பணிப்பிற்கு மேலாக முதன்மை கொள்ளக்கூடாது.

3. மேலும் அடுத்த சோதனையானது இயேசுவின் சீஷர்களை பிரமிக்கத்தக்க சவாலாக இருக்கிறது. "அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு

என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னி மித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்" (மத். 16:24, 25). குடிமகன் அல்லாதவர்கள், அதாவது அடிமைகள், வெளிநாட்டினர், கலகக்காரர்கள், மற்றும் பயங்கர குற்றவாளிகளை கொடுமைப்படுத்தி மரிக்கச் செய்யும் கருவியாக சிலுவையை ரோம் ஏற்படுத்தியிருந்தது. இந்த வாக்கியமானது அப்போஸ்தலர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்கான எதிர்பார்ப்பின் நம்பிக்கைகளுக்கு எதிராக உள்ளது. மேசியாவாகிய இயேசுவின் வலது இடது பக்கத்தில் இருக்க. தெய்வீக ஆசீர் வாதங்கள், சிங்காசனம், செல்வம், இவைகளை அவர்கள் எதிர் பார்க்கிறார்கள். சிலுவையில் பாடுபடுவதைவிட வேறு எந்த எண்ணமும் இல்லை.

இயேசுவின் சீஷர்களுக்கு இந்த சத்தியத்தை கிரகித்துக்கொள்ள கடினமாக உள்ளது. எண்ணற்ற சம்பவங்களில், அற்ப விசுவாசத்திற்கும் மற்றும் புரிந்துகொள்ளுதலின் குறைவிலும் ஆண்டவர் அவர்களை சரி செய்தார். எல்லா மனுக்குலத்திற்கும் விசுவாசத்தின் தகப்பனாக ஆசீர்வாதமாயிருக்கும் அழைப்பை புரிந்துகொள்வதற்கு, ஆபிரகாமிற்கு அநேக வருடங்கள் எடுத்துக் கொண்டது என்பது நமக்கு எதுவும் ஆச்சரியமாக இல்லை (ரோமர் 4:16). ஆதியாகமத்தின் வாக்கியத்திலிருந்து, வழிநடத்துதலிலும், கடிந்துகொள்ளுதலிலும், மற்றும் வாக்குத்தத்தத்திலும் தேவனுடைய சத்தத்தை விட்டு அநேக வருடங்கள் தூரமாய் போயிருப்பதாக தெரிகிறது, ஆகவே தெய்வீக அறிவுறுத்தலில் மட்டும் விசுவாசத்தில் நடக்கும்படிக்கு அவர் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது.

முற்பிதாவுடன் தேவன் ஏன் இவ்வளவு பொறுமையுடனும் மற்றும் சகிப்புத் தன்மையுடனும் இருந்தார் என்பதை, அவருடைய ஆவிக்குரிய இயல்பை படிக்கும்போது நாம் புரிந்துகொள்ள உதவும். மனுக்குலத்தின் "நட்சத்திர வெளிச்சம்"[17] யுக வாழ்க்கையில்; அவன் செய்தது போல், அவரிடத்தில் குறிப்பிட்ட அளவிலான தெய்வீக சத்தியம் மட்டுமே இருந்தது. விசுவாசத்தில் குறைவுள்ளவனும் மற்றும் கீழ்ப்படிவதில் தோற்றுப்போனவனுமான இந்த மனுஷன் எவ்வாறு "விசுவாசத்தின் தகப்பனானான்"? பல சமயங்களில் விசுவாசம் பலவீனமாக இருந்தாலும் கூட, தேவனை விசுவாசிப் பதை ஆபிரகாம் ஒருபோதும் நிறுத்தவில்லை. அவன் ஒருபோதும் தேவனுடைய கரத்தை விட்டுவிடவில்லை, தேவனும் அவன் கரத்தை விட்டுவிடவில்லை. தன்னுடைய சொந்த திட்டங்களை நம்புவதைவிட தேவனிடத்தில் அவன் நம்பிக்கையாயிருக்க வேண்டியது அவசியம் என்பது உண்மை - ஆனால் உலக வரலாற்றில், விசுவாசி வேறு எவ்வாறு உரிமைபாராட்டுவார்? ஆராய்ச்சியின் இறுதியில், அவன் தேவனை

விட்டுவிடவில்லை, மற்றும் யாவேவும் அவனை ஒருபோதும் விட்டுவிடவில்லை.

ஒரு நபர் எத்தனை முறை விழுந்தார் என்பது விஷயமல்ல, அவர் தன்னுடைய தோல்வியிலிருந்து எழுந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு, தேவனுடனான சஞ்சரிப்பிற்கான விசுவாசத்தில் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பலப்படுகிறான் என்பதே விஷயம். ஆபிரகாமைப் போன்று சிலர் தங்கள் தவறுகளிலிருந்து ஒருபோதும் ஒன்றும் கற்றுக்கொள்வதில்லை. ஈசாக்கை பலி செலுத்தும் - தேவன் உச்சகட்ட கட்டளையை கொடுத்தபோது - யாவே மேலிருந்த முற்பிதாவின் விசுவாசம் எந்த அளவிற்கு உயர்ந்தது என்றால் அவர் கொடுத்த வழிமுறைகளின் எந்த வகையிலும் பின்பற்றுவதிலிருந்து அவன் விலகவில்லை. அவனும் சாராளும் கர்த்தரிடத்திலிருந்து ஏற்கனவே ஒரு அற்புதத்தை அனுபவித் திருக்கிறார்கள். அவர் அவர்களுடைய வயதான சரீரத்தில் குழந்தை உருவாகும்படியான புதிய சக்தியையும் பலத்தையும் கொடுத்தார், அதன் விளைவு ஈசாக்குப் பிறந்தான். தெய்வீக வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்ட, அவன் குமாரனை கொன்றாலும், கர்த்தர் நிச்சயமாக அவனை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்புவார் என்று ஆபிரகாம் விசுவாசித்தான் (எபி. 11:17-19). இம்மாதிரியான விசுவாசம் ஒரே இரவில் ஆபிகாமிற்கு வந்துவிடவில்லை, அதே போன்று தான் இன்றைய கிறிஸ்தவர் களுக்கும். ஒருவன் தன் ஓட்டத்தை எப்படித் துவங்கினான் என்றோ அல்லது நடுவில் எவ்வாறு தவறாக அடி எடுத்து வைத்தான் என்பதோ அல்ல அவன் எவ்வாறு ஓட்டத்தை முடித்தான் என்பதே முக்கியம் (2 தீமோ. 4:5-8).

*தேவன் பரீட்சை மற்றும் சோதனையை விசுவாசிகள் மேல் ஏற்படுத்தும்போது அல்லது அனுமதிக்கும்போது, விளக்கங்களை விட அவருடைய வாக்குத்தத்தங்களில் கூர்நோக்குவது தான் அவர்களுக்குத் தேவைப்படுகிறது* (22:3-5). அநேக சமயங்களில், எந்தவித விளக்கங்களும் இல்லாமல் கடினமான பரீட்சைகளை அவருடைய மக்கள் கடந்து செல்ல வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஏன் ஆபிரகாம் தன் குமாரனை தகனபலியாக இடும்படிக்கு தேவன் கட்டளையிட்டார் என்ற எந்த தெய்வீக காரணங்களையும் எழுத்தாளர் வெளிப்படுத்தவில்லை, கர்த்தரிடமிருந்து எதுவும் முற்பிதா பெறவில்லை என்று காணப்படுகிறது. இந்த சூழலானது சோதோம் கொமோரோ அழிவின் விஷயத்தில் மாறுபாடாக நிலையில் உள்ளது. இந்த நகரங்களின் அழிவு குறித்து முற்பிதா தேவனிடம் கேள்வி கேட்டபோது, அக்கிரமக்காரர்களோடு நீதிமான்களை அழிக்க மாட்டேன் என்பதை கர்த்தர் திரும்பத் திரும்ப உறுதிப்படுத்துகிறார் (18:22-33).

எல்லாவற்றிற்கும் மற்றும் உயிரின் சிருஷ்டிகராகிய தேவன், நம்முடைய கேள்விக்கு பதில் சொல்ல அவர் கடன் பட்டிருக்கவில்லை.

அகிலத்தின் சர்வ சுதந்திரராகிய கர்த்தர், பலவீனமான, பாவம்நிறைந்த மனுக்குலத்திற்கு தம்மைக் குறித்து விவரிக்க அவர் கடமைப்பட்டிருக்கவில்லை. இன்னமும், கடினமான மற்றும் அதீத சோதனையின் சமயத்தில் தமது கட்டளைகளுக்கான காரணங்களை அவர் கொடுத்திருக்கிறார். உதாரணமாக, மனுக்குலம் தங்களை அக்கிரமங்களுக்கும் மற்றும் கலகத்திற்கும் ஒப்புக்கொடுத்ததால் அழிக்கும்படிக்கு, பூமியின் மீது பெருவெள்ளத்தை அனுப்புவேன் என்று தேவன் நோவாவுக்கு விளக்கமளித்தார். வரவிருக்கிற அழிவிலிருந்து நோவாவும் அவன் குடும்பமும் தப்பித்துக்கொள்ள ஒரு பேழையைக் கட்டும்படிக்கு நீதிமானிடம் அவர் அறிவுறித்தினார் (6:8-22). மோசேக்கும் அவன் மூலம் இஸ்ரவேலருக்கும் தேவன் வெளிப்படுத்தியது என்ன வென்றால், தமது ஜனங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க பார்வோனை உந்தும்படிக்கு, எகிப்தியர்கள் மீது வாதைகளை அனுப்புவார் (யாத். 6:1-9; 7:14-12:41). தேசம் முழுவதும் முதற்பிறப்பின் மரணம் என்ற இறுதி வாதையிலிருந்து தப்பிக்கும்படிக்கு, விசுவாசிக்கும் ஒவ்வொரு குடும்பமும் ஒரு ஆட்டைக் கொன்று அதன் இரத்தத்தை நிலைகளிலும் உத்திரத்திலும் பூசவேண்டும். பின்பு அவர்கள் பிரயாணத்திற்கு ஆயத்தமாகும்படிக்கு, அந்த ஆட்டை சுட்டு சாப்பிட வேண்டும். இறுதியாக, அந்த வாதையானது அவர்களைக் கடந்து செல்லும் போது, காலை வரை அவர்கள் வீட்டிற்குள்ளேயே இருக்க வேண்டும்.

இப்பொழுது, இவையெல்லாவற்றையும் அவர்களுக்கு விவரிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது, காரணம் ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபின் தேவனைக் குறித்து நானூறு வருடங்களுக்குப் பின்பு குறைந்த நினைவை மட்டுமே அவர்கள் கொண்டிருந்தனர். இதன் விளைவாக, ஒன்றான மெய் தேவனுக்கு நேரான எபிரெயர்களின் ஆவிக்குரிய அர்ப்பணிப்பு குறைந்து போயிற்று, மேலும் அவர்கள் விபச்சாரத்திற்குள் சென்று, எகிப்திய தெய்வங்களை வணங்கினார்கள் (யோசுவா 24:14). ஆகவே, பார்வோனின் கோபத்திலிருந்து இஸ்ரவேலரை விடுவித்து, வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு கொண்டுபோகக் கூடிய அற்புதங்கள் மூலம் தமது ஜனங்களுக்குள் தேவன் விசுவாசத்தை உருவாக்க வேண்டியது அவசியமாயிருந்தது பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அவர்களுடைய முற்பிதாக்களிடம் உண்டுபண்ணின, உடன்படிக்கை வாக்குத்தத்தங்களை நிறை வேற்றும்படிக்கு யாவே இவ்வாறாக உறுதிப்படுத்தினார்.

ஆயினும், தேவனுடைய கட்டளைகளுக்கு எந்தவித விளக்கமும் ஆபிரகாமுக்குத் தேவையில்லை, காரணம் அநேக ஆண்டுகளாக அவன் தேவனோடு நெருங்கிய உறவைக் கொண்டுள்ளான். தேவனுடைய ஏராளமான ஆசீர்வாதங்களையும், இரக்கத்தையும், கிருபையையும் கண்டிருக்கிறார், தன்னுடைய சந்ததி (ஈசாக்கு) மூலம் உலகத்தின்

எல்லாக் குடும்பங்களும் ஆசீர்வாத மாயிருக்கும்படிக்கு அவன் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நம்பியிருந்தான் (17:19, 21; 18:9-14; 21:12). அவன் ஏற்கனவே இந்த தெய்வீக வாக்குத்தத்தத்தை நம்பியிருந்தபடியால், எந்தவித தங்குதடையுமில்லாமல், ஈசாக்கை பலிபீடத்தில் பலியிட ஆபிரகாம் ஆயத்தமாயிருந்தான் (ரோமர் 4:16, 20, 21). மிகவும் அற்புதமான விஷயம் என்னவென்றால் கர்த்தர் மேல் எந்தவித அதிருப்தியும் கொள்ளாமல் தனது நேசக்குமாரனை கொலை செய்ய ஆயத்தமாயிருந்தான், ஆராதனையின் செயலாக இந்த பலியை அவன் செய்தான் (22:5).[18] முற்பிதாவின் சிந்தையிலிருந்தது என்ன வென்றால் தேவனுடைய வாக்குத்தத்தம் ஈசாக்கை மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கும் என்பதில் குறிப்பிட்ட உணர்வில் உறுதியாக இருந்தது.

அதேபோன்று, மரணத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறுதல் என்ற அடிப்படையிலேயே அப்போஸ்தல சுவிசேஷம் உள்ளது (அப். 13:32, 33), மேலும் உண்மையான விசுவாசிகளுக்கு இது நித்திய ஜீவனை உத்திரவாதமளிக்கிறது (அப். 13:48). இதன் காரணமாகவே ஆதிக்கிறிஸ்தவர்களின் இரத்த சாட்சி குறித்து தேவனிடம் விளக்கங்கள் கேட்கப்படவில்லை, மாறாக, ரோமானிய விளையாட்டு அரங்கத்தின் நடுவில் ஆராதனை மற்றும் பாடல்கள் உடன் அவர்கள் கொலை செய்யப்பட்டனர். மரணம் என்பது முடிவல்ல என்று அவர்கள் அறிந்திருந்தனர், பவுல் சொன்னார், "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலி. 1:21). இயேசு மரணத்தின் மேல் வெற்றி சிறந்து உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது போல, அவர் மூலமாக தம்முடைய வாக்குத்தத்தத்தின்படி மகிமையான உயிர்த்தெழுதலில் பங்கடைவார்கள் என்று விசுவாசத்தினாலே அவர்கள் அறிந்திருந்தனர் (1 தெச. 4:13-18; 1 யோவான் 2:25; 3:1-3). இம் மாதிரியான விசுவாசம் என்பது "வெற்றிகரமானது" அது "உலகத்தை" மேற்கொள்ளும் (1 யோவான் 5:4, 5).

*பரீட்சையின் நேரங்களில், கர்த்தருடைய வாய்ப்புகளிலேயே விசுவாசிகள் கவனமாக சார்ந்து இருக்க வேண்டும்* (22:6-14). பரீட்சையின் விசேஷ முக்கியத்துவத்தை செயல்படுத்தும் இரண்டு கூற்றுக்களை இந்தப் பகுதி பதிவு செய்கிறது. முதலாவது, நெருப்பையும் கட்டையும் ஈசாக்கு கண்டதும் தன் தகப்பனைப் பார்த்து அவன் கேட்டது, "தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே?" ஆபிரகாமின் பதிலானது, "என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்" (22:7, 8). வயது முதிர்ந்த முற்பிதாவின் இந்த காலக்கட்டத்தில், தேவனுடைய கட்டளையைவிட பின்பற்றுவதற்கு மேலான வேறு எந்த திட்டமும் இல்லை, ஆனால் தேவனுடைய திட்டத்தில் நம்பிக்கை யாயிருந்தான். "அவர் விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப் பட்டவராய்" இருந்தார் (கலா.

3:23), ஆபிரகாம் தேவனுடைய மனிதனாயிருக்க வேண்டுமென்றால் ஈசாக்கை பலியிடும் கட்டளைக்கு கீழ்ப்படிவதைவிட்டு தப்பித்துக்கொள்ள வாய்ப்பே இல்லை.

நான் குழந்தையாயிருந்தபோது, "வேடிக்கையின் வீட்டிற்குப்" போவதில் மகிழ்ச்சியாயிருப்பேன், அது ஒரு திகைப்பூட்டும் வழித்தடம் கொண்டதும் திருவிழா ஈர்ப்பும் கொண்டதுமாகும். இந்தப் பகுதியின் வழிகள் பல திசைகளில் செல்கின்றன வழக்கமாக இறுதி முடிவடைவதற்கு, ஒரே ஒரு பாதை வெளியேற வழிநடத்தும். அது ஏமாற்றம் மற்றும் மகிழ்ச்சி அளிக்கக் கூடியதும், தவறான திருப்பங்களைக் கொண்டதும், வெளியேறுவதற்கு திகைப்பூட்டக் கூடிய வழியைத் தான் காண முடியும். தனது வாழ்வில் அநேக தவறான திருப்பங்களை ஆபிரகாம் எடுத்தார், அவைகள் ஏமாற்றம் அளிக்கக் கூடியதாகவும் காணப்பட்டன, மேலும் அவைகள் மகிழ்ச்சியளிக்கக்கூடியவைகளாக இல்லை. தேவனுக்குக் கீழ்ப் படியாமலிருப்பதை அவன் நியாயப்படுத்தின ஒவ்வொரு முறையும், அவனுடைய சூழல் பிரச்சனை மிகுந்ததானது. இந்த உச்சகட்ட பரீட்சையை அவன் சந்திக்கையில், ஒரே தேவன் அவனுக்கு முன் வைத்திருந்த திட்டத்தைவிட, மேலான வேறொரு நல்ல திட்டம் இருந்தால் நலமாக இருந்திருக்கும் என்ற ஆச்சரியத்தை முற்பிதா வெளிப்படுத்தியிருக்க வேண்டும். அவன் இவ்வாறாக சிந்தித்திருக்கலாம், "என் குமாரனைக் கொன்றால், எதிர்கால சந்ததியான பூமியிலுள்ள எல்லாக் குடும்பத்திற்குமான ஆசீர்வாதம் என்ற என்னுடைய எல்லா நம்பிக்கை மற்றும் கனவு முடிவடையாதா?" ஒருவேளை துணிகரமாக, "தேவன் எனக்கு நல்லவராகவே இருக்கிறார், பல்வேறு வழிகளில் அவர் என்னை ஆசீர்வதித்துள்ளார் - மாம்சீகத்திலும் மற்றும் ஆவிக்குரிய ரீதியிலும் - வாக்குப்பண்ணப்பட்ட குழந்தையான ஈசாக்கை எனக்கு கொடுத்தது என்பது விசேஷமானது! அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமலிருப்பது மூலம் எவ்வாறு நான் அவரைத் தோற்கடிப்பேன்?"

நிச்சயமாக, இது ஆபிரகாமின் வாழ்க்கையில் தீர்மானிக்கும் நேரமாயிருந்தது. இந்த நிலையற்றத் தன்மையை எந்த மனுஷீக தந்திரமும் தீர்க்க முடியாது. நிற்கும் சூழ்நிலையில், தேவனுக்குக் கீழ்ப்படிந்தாலும் அல்லது கீழ்ப்படியாமல் போனாலும் தவறக் கூடியதாகவே காணப்படுகிறது. இந்தத் தீர்மானத்தின் தருணத்தில், விசுவாசத்தின் கதவு மூலமாக அவன் நுழைந்தான். இதற்கு இடையில், கதவின் அடுத்தப் பக்கத்தில் என்ன இருக்கிறது என்று அவன் பார்க்க முடியாதவனாக இருந்தான், நல்லவரும் மற்றும் நீதியுமான தேவனை அவன் அறிவான், இந்த அறிவுப் பூர்வ திகைப்பிலிருந்து வெளிவரும்போது அவனுக்குக் காத்திருப்பார் என்று அறிந்திருந்தான்.

உண்மையாகவே அவனுடைய விசுவாசம் *தேவனை நம்புகிறதாயிருந்தது.*

ஆபிரகாம் யாவேவை ஒன்றான மெய் தேவனாக மட்டும் அவன் விசுவாசிக்கவில்லை, ஆனால், தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன்களை அளிக்கிறவராகவும் அவன் நம்பினான் (எபி. 11:6). அநேக வருடங்கள் முற்பிதா தேவனோடு நடந்த பின்பு, முற்பிதா அவரை நன்கு அறிந்திருந்தான். அவன் இவ்வாறு தனக்குள் சொல்லிக்கொல்லுமளவுக்கு அவன் கர்த்தரை விசுவாசித்தான், "நான் என் மகனைக் கொன்றால், கர்த்தர் அவனை உயிரோடே எழுப்புவார் மற்றும் தொடர்ந்து தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார்" (காண்க எபி. 11:19).

இம்மாதிரியான பண்டைய காலத்தில் உயிர்த்தெழுதலைக் குறித்து வேதாகமம் விசேஷ போதனைகளைக் கொடுத்திராத நிலையில், சரீர உயிர்த்தெழுதலைக் குறித்து ஆபிரகாம் என்ன அறிந்திருந்தான் என்று நமக்குத் தெரியாது. மரணத்திற்குப் பிறகும் வாழ்க்கை தொடரும் என்று ஆதிகாலத்து மக்கள் விசு வாசித்தார்களா என்று நமக்குத் தெரியாது. ஆகவேதான், வாழ்க்கைக்குப் பின்பு தேவைப்படும் என்று அவர்கள் நினைத்தவற்றுடன் தங்களுக்குப் பிரியமானவர்களை அடக்கம் பண்ணினர். ஒரு கோணத்தில், மரணத்திலிருந்து வந்தவனாக ஈசாக்கை ஆபிரகாம் பார்த்தான், முதலாவதாக அது சாராளின் மரித்த கர்ப்பத்திலிருந்து வந்தது ஆகும். ஆகவே, மோரியா மலையின் பலிபீடத்திலிருந்து இரண்டாவது முறையாக தேவன் அவனை உயிர்ப்பிப்பார் என்று அவன் உறுதியாக விசுவாசித்தான்.

இந்த நம்பிக்கையுடன், முற்பிதா கத்தியை எடுத்திருப்பான், தேவன் அவனுக்கு அறிவுறித்தியது போன்று, தன் மகனை வெட்டத் துவங்கியிருப்பான் - ஆனால் "கர்த்தருடைய தூதன்" அவனை நிறுத்தினான் (22:11). இந்த செயலில் ஈடுபடக் கூடியவனாக ஆபிரகாம் தன்னை உருவாக்கிக் கொண்டான், காரணம் தேவனுடைய வாக்குத்தத்தத்திலும் மற்றும் ஆசீர்வாதத்திலும் அவன் நம்புவதிலேயே கவனமாயிருந்தான். பலி செலுத்தப் படுவதிலிருந்து அவனுடைய கரம் நிறுத்தப்பட்ட போது, ஈசாக்குக்கு மாற்றாக கர்த்தர் ஒன்றை தருவார் என்பதை அவன் அறிந்தவனாக நோக்கிப் பார்த்தான். முட்புதரில் சிக்கியிருக்கும் ஒரு "ஆட்டுக்குட்டி"யைக் (கிடா) கண்டான் (22:13). நன்றி மிகுந்த உள்ளத்தோடு அந்த இடத்திற்கு "கர்த்தர் பார்த்துக்கொள்வார்" என்று பெயரிட்டான். "கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக் கொள்ளப்படும்" என்று இந்நாள் வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது (22:14).

இந்த முழுத் தொகுப்பிலுமுள்ள தேவன், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் ஆட்டுக்குட்டியானது உருவக மாதிரியாகவும்[19]/தேவன் என்பவர் எதிர்மாதிரியாகவும் இருக்கிறது, அவருடைய மகா அன்பின்

விளைவாக, கொல்கொதாவில் இயேசு மூலம் மனுக்குலத்திற்கு அவர் செய்தார் (யோவான் 3:16). இந்தப் பகுப்பாய்வை புரிந்துகொள்ளும்படிக்கு, பொருந்துகிற வகையான எதிர்மாதிரி என்பதே ஒரு மாதிரியாகும் என்பதை நாம் அங்கிகரிக்க வேண்டும். வகையானது பொருத்தத்துடன் உறவு கொண்டுள்ளது அதாவது, அதால் உருவாக்கப்பட்டுள்ளது, வழக்கமாக சில அநேக ஒற்றுமைகளுடன் வெளிப்படும். மறுபக்கத்தில், வெவ்வேறு பொருட்களால் உருவாக்கப்பட்டிருந்தவை முற்றிலும் வேறு பாட்டுடன் அவைக் காணப்படுகின்றன. வகை என்பது பிரிக்க முடியாதது, அது ஒரு துண்டுகளின் ஒட்டுமொத்தம், அதன் பொருத்தம் எவ்வாறு காணப்படும் என்பதை முழுமையில்லாத ஒன்றை வழங்கும். மெல்லிய நூல் கொண்டு நுட்பமாக கைவேலையாக பின்னப்பட்டதை தன்னகத்தேக் கொண்டது தான் பொருத்தம், சாதாரண வகையினால் மட்டமான காகிதம் கொண்டு செய்ததைவிட, நீண்ட நாட்கள் உழைக்கக் கூடியதாக செய்ய வேண்டும். இந்த குணாதிசயங்களை மனதிற் கொண்டு, ஈசாக்கின் வேதாகம தொகுப்பிலுள்ள மாதிரி/எதிர்மாதிரி உறவுகளை நாம் கவனத்தில் கொள்வோம்.

இயேசு மற்றும் ஈசாக்கின் அற்பதமான பிறப்புகளுக்கு முதல் ஒற்றுமை சம்பந்தப்படுகிறது. தெய்வீக வல்லமையினால் ஈசாக்கின் பிறப்பானது உண்டானது, அதாவது குழந்தை பேறு நடைபெறு மளவுக்கும் கர்ப்பம் உற்பவிக்குமளவுக்கும் ஏதுவாக, ஆபிரகாம் மற்றும் சாராளின் வயதான சரீரங்களை திடப்படுத்தப்பட்டது (ரோமர் 4:18, 19). முக்கியமான வித்தியாசம் என்னவென்றால், மரியாள் கன்னிகையும், பரிசுத்த ஆவியினால் உற்பவித்திருந்தாள், ஆகையால், இயேசுவுக்கு மாம்ச தகப்பன் இல்லை (மத். 1:18, 25).

இரண்டாவது ஒற்றுமை என்னவென்றால், ஈசாக்குப் பலியிடப் படுவதற்குப் பதிலாக ஒரு ஆட்டுக்குட்டியை (கிடா) தேவன் வழங்கினார், அவன் மரிப்பதற்கு ஏதுவானவன் அல்ல, ஆகையால் அவன் உயிரோடு போகக் கூடியவனாக இருந்தான். மரிப்பதற்கு தகுதியான பாவிகளுக்குப் பதிலாக கிருபாதார பலியாக இயேசு கிறிஸ்துவை (தேவாட்டுக்குட்டி; ஏசாயா 53:7; யோவான் 1:29). தேவன் வழங்கினார் (ரோமர் 3:23-25; 1 யோவான் 2:1, 2). தேவனுடைய கிருபையினால், இந்த பலியினால் பலன் பெற விரும்புகிறவர்கள் நித்திய ஜீவனை அனுபவிப்பார்கள், அது குமாரனில் இருக்கிறது (1 யோவான் 5:11).

மாதிரி/எதிர்மாதிரியின் உறவின் தோற்றம் என்பது விசேஷமானது. பலிபீடத்திலிருந்து ஈசாக்கை எடுத்துவிட்டு மரிக்கும்படிக்கு அப்பாவியான ஆட்டை அதன் மீது வைத்தான், ஆனால் தேவன் மிகவும் பெரிய காரியத்தை செய்தார்: அவர் தம்மையே மாம்சத்தில் கட்டப்பட்டு இயேசு என்னும் ஆள்தத்துவத்தில் பூமிக்கு வந்தார் (யோவான் 1:14, 18;

14:8-11). அவர் பாவம் செய்யாமல் மனிதர்கள் மத்தியில் வாழ்ந்தார் மற்றும் எல்லா பாவங்களின் மனுக்குலத்தின் இடத்தையும் அவர் சிலுவை என்னும் தம்முடைய பலிபீடத்தின் மேல் எடுத்துக்கொண்டார் (காண்க: எபே. 2:16; கொலோ. 1:19, 20; எபி. 13:12; 1 பேதுரு 2:24). உண்மையில், சிலுவை மரணம் என்பது தேவனுடைய வாழ்க்கையில் ஒரு சம்பவம், ஏற்கனவே அவர் "கிறிஸ்துவுக்குள் இருந்தபடியால்," அது ஒப்புரவாகுதலின் அனுபவமாகும் (2 கொரி. 5:19, 21). விழுந்துபோன மனுக்குலத்திற்கான சிருஷ்டிகரின் அன்பின் அதீத மேன்மையை (எபே. 1:18-20), உலகத்திற்கு சிலுவை விளங்கப்பண்ணிற்று (யோவான் 3:16; 1 யோவான் 3:1).

---

இறுதிக் குறிப்புகள்

[1]G. Gerleman, "נסה," in *Theological Lexicon of the Old Testament*, trans. Mark E. Biddle, ed. Ernst Jenni and Claus Westermann (Peabody, Mass.: Hendrickson Publishers, 1997), 2:741–42. [2]Francis Brown, S. R. Driver, and Charles A. Briggs, *A Hebrew and English Lexicon of the Old Testament* (Oxford: Clarendon Press, 1962), 402. [3]புதிய ஏற்பாட்டில் *மோனோஜின்ஸ்*-ன் சரியான அர்த்தம் இது தான். (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker [Chicago: University of Chicago Press, 2000], 658.) இயேசுவின் குறிப்புகளுடன் கிரேக்க பதங்களை சிறந்த முறையில் மொழிபெயர்த்தல், காண்க யோவான் 1:14, 18; 3:16, 18; 1 யோவான் 4:9 (NIV; NRSV). [4]ஆலய மலையுடன் ஈசாக்கின் பலியை தொடர்புப்படுத்துதல், காண்க Josephus *Antiquities* 7.13.4; *Jubilees* 18.13. [5]G. Lloyd Carr, "עָלָה," in *TWOT*, 2:666–68. [6]*Genesis Rabbah* 56.3. [7]இது ஒரு எரியும் விளக்கு அல்லது எரி தணலாக இருந்திருக்கக் கூடும். [8]பின்வருவனவற்றை ஒப்பிடு: "யாக்கோபு, யாக்கோபு" (46:2), "மோசே, மோசே!" (யாத். 3:4), "சாமுவேல், சாமுவேல்!" (1 சாமு. 3:10), மற்றும் "சவுலே, சவுல" (அப். 9:4). [9]22:2ல் வர்ணனையில் குறிப்பிட்டுள்ளதுபோல், ஈசாக்கு ஆபிரகாமின் "ஒரே விசேஷ குமாரன்" என்பதே யாசிட் ன் அர்த்தம். [10]மனிதனுடைய அக்கிரமத்தினால் தேவனுடைய இருதயம் துக்கப்பட்டதும் மற்றும் உடைந்துபோனது, அது வெள்ளத்தை முரட்டுத்தனமாக்கியதை 6:5, 6ல் காண்க.

[11]மாதிரி என்ற பதமானது NASB (παραβολή, *parabolē,* பாராபோலே) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அது அடிக்கடி "பாரபில்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. NIV யில் "உருவகமாகப் பேசுதல்" விளக்கியது மூலம் இயல்பான உவமையில் சொல்லப்பட்டது. [12]24:60ல் ரெபேக்காளின் குடும்பமானது அதே மாதிரியான ஆசீர்வாதத்தை அவளுக்கு வழங்கியது. [13]Edwin C. Hostetter, "Bethuel (Person)," in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 1:715. [14]Allen C. Myers, "Concubine," in *The International Standard Bible Encyclopedia*, ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 1:758. [15]Kenneth A. Mathews, *Genesis 11:27—50:26*, The New American Commentary, vol. 1B (Nashville: Broadman & Holman Publishers, 2005), 310. [16]எபிரேய பதம் נָסָה (*nasah,* நாசா), மற்றும் இதற்கு சமமான கிரேக்கப் பதம் πειράζω (*peirazō*, பெய்ராசோ). [17]முந்தைய காலத்திய விரிவுரையாளர்கள் முற்பிதாக்கள் யுகத்தை "நட்சத்திர வெளிச்சம் யுகம்" என்றும் மோசேயின் யுகத்தை "சந்திர வெளிச்சம் யுகம்," மற்றும் கிறிஸ்தவ யுகத்தை "அந்திவெளிச்சம் யுகம்" என்றும் பயன்படுத்தினார்கள். (Alexander Campbell, "The Jewish Age—No. XIV: The Ministry of John," in *The Christian Baptist* 7 [3 May 1830]: 222.) [18]ஒருவன் எவ்வாறு உணருகிறான் என்பதில் இல்லை ஆராதனை, இது தனிநபர் உணர்வுகளுக்கு மாறாக தேவனை மகிமைப்படுத்துவதில் மற்றும் கனம்பண்ணுவதில் ஒருவர் எடுக்கும் முடிவில் தான் உள்ளது (காண்க யோபு 1:20, 21). [19]எபிரெயர் 9:9; 11:19ல் "παραβολή,

*parabolē*, பாரபில்” என்ற வார்த்தையை மொழிபெயர்க்க NASB “குறியீடு” மற்றும் “மாதிரி” என்ற பதத்தைப் பயன்படுத்துகிறது. (காண்க Bauer, 759.)